# சோதிடமலர்

# SOTHIDA MALAR




உள்ளே............

- ராகு, கேது மாற்றப் பலன்கள்
- எண் சோதிடமும், அதன் உண்மைகளும்
- விதியை வெல்ல முடியுமா?
- ஆய்வு மன்றம்
- சோதிடம் கற்போம்
- பஞ்சாங்கங்களும், இயற்கை நிகழ்வுகளும்

இன்னும் பல

க்ஷய ௵ ஆவணி ௴

(17-8-86—16-9-86)

விலை ரூபா: 3-00



மாதவெளியீடு

உ

# சோதிடமலர்

SOTHIDA MALAR

*

ஆசிரியர்:

பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா

(சம்ஸ்கிருத பண்டிதர்)

*

க்ஷய ௵ ஆவணி ௴

( 17 - 8 - 86 )

மலர் 9 | இதழ் 5

## ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்துதி

உத்யத் பாஸ்கர சன்னிபம் த்ரிணயநம்
ஸ்வேதாங்க ராகப்ரபம்
பாலம் மௌஞ்சி தரம் ப்ரசன்ன வதனம்
ந்யக்ரோத மூலேஸ்திதம் |
பிங்காக்ஷம் ம்ருக்சாபக ஸ்திதிகரம்
சுப்ரஹ்ம சூத்ராகிருதிம் |
பக்தா னாமபயப்ரதம் பயஹரம்
ஸ்ரீ தக்ஷிணா மூர்த்திகம் ||

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டுஆர்தல்
உண்மையாம் எனின் உலகர் முன் வருக என உரைப்
[பார்.

"தன்நலம் கருதாத புண்ணியச்செயல், தியாகசிந்தையுடன் செய்யும்சேவை, உலக நன்மைக்காக ஆற்றப்படும் செயல், இறையாராதனைக்காக செய்யப்படும் கிரியை, ஆத்மீகசிந்தையுடன் செய்யப்படும் செய்கை இவையெல்லாம் யக்ஞம் (வேள்வி) எனப்படுகிறது.

இம்மாத விசேடங்கள்

## ஆவணி ஞாயிறு

சிங்கமாதமெனப்படும் ஆவணியில் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் சிங்கராசியதிபதியாகிய சூரியனுக்குரிய வரரங்களாக கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. உடல், கண் சம்பந்தமான நோய்க் குறைபாடுள்ளவர்கள் இந்நாட்களில் காலையில் ஆசார அனுட்டானங்களுடன் பன்னிரு செவ்வரத்தை மலர்களால் அல்லது செந்தாமரை மலர்களால் பன்னிரு சூரியர்களின் பெயரையும் சொல்லி வழிபாடாற்றுவதோடு, சர்க்கரைப் பொங்கலிட்டு சூரியபகவானை வணங்குவதும் இவ் விரதமுறைகளில் முக்கியமானதாகும்.

## ஆவணிச் சதுர்த்தி

சதுர்த்தித்திதி சம்பவாய, சதுர்த்தீ பூஜனப்ரீதாய என்றெல்லாம் போற்றப்படும் விநாயகப் பெருமானுக்குரிய விரதம் திதிகளிற் சிறந்ததாக அமைந்துள்ளது. மகேஸ்வரன் எனும் அரசன் வியாழபகவானின் வரத்தினால் கயமுகாசுரனாகப் பிறந்து பின் சிவனின் சூலாயுதத்தால் தலைவேறாகச் சிதைத்தபொழுது அத்தலையை தேவர்கள்யாவரும்காண திருக்கைலாயத்தில் பரியிலிவனத்தில் குழந்தை உருவமாக இருந்த விநாயகர் தமது உடலில் சேர்த்து யானைமுகமும் மனித உருவங் கொண்ட உருவமாகினார் என்பது புராணவரலாறு. இதேசமயம் சிந்தூரன் என்றும் அசுரன் சிவனிடம்பெற்ற தவவலிமையால் செருக்கடைந்து தேவர்களையெல்லாம் வருத்தியபோது அவர்களைக் காப்பாற்றும் பொருட்டு அவதரித்ததினமே ஆவணிமாத பூர்வபக்ஷச் சதுர்த்தித்திதியாகும். சதுர்த்தித்திதியில் தோன்றிய இவரை இத்தினத்தில் பூஜிப்பதால் சதுர்த்தீ பூஜனப்ரீதாய என்னும் சகஸ்ரநாம அர்ச்சனையும் இப்பெருமைக்குரியதாக விளங்குகிறது. இவ்விரதத்தை அனுட்டிப்பவர்கள் ஆவணிமாதச் சதுர்த்தியில் தொடங்கி மாதம்தோறும் வரும் பூர்வபக்ஷச் சதுர்த்தி தினத்தை பன்னிருவருடம் தொடர்ந்து நோற்க வேண்டும். அன்று விரதமிருந்து மாலையில் விநாயகர் கோவில்களில் அபிஷேக ஆராதனைகளைத் தரிசித்து சந்திரதர்சனமும் செய்துவரல் வேண்டும். அறுகினால் இவரை அர்ச்சிப்பதும் மோதகம், கடலை, எள்ளுருண்டை, அவல், விழாம்பழம் முத

(3ம் பக்கம் பார்க்கவும்)

# நாள் எப்படி?

ஆவ 1 ஞாயி (17-8-86) துவாதசி காலை 8-23வரை, திரயோதசி பி.இ 5-31வரை, பூராடம் பகல் 12-20 வரை, சித்தாமிர்தம், பிரதோஷவிரதம் சுப தினமல்ல. ராகு 4-35—6-05

ஆவ 2 திங் (18-8-36) சதுர்த்தசி பி.இ 2-49வரை, உத்தராடம், மரணம் பகல் 10-18வரை, நடேசர பிஷேகம், கரிநாள். சுபகருமங்களை விலக்குக. ராகு 7-35—9-05

ஆவ 3 செவ் (19-8-86) பூரணை பி.இ 12-25வரை, திருவோணம் காலை 8-27வரை, சித்தம், பூரணை விரதம் வயல், தோட்டச் செய்கைகள் மேற்கொள் ளலாம். ராகு 3-05—4-35

ஆவ 4 புத (20-8-86) பிரதமை இரவு 10-28வ. அவிட்டம், மரணம் காலை 6-57வரை, சதயம் பி.இ 5-56வரை, காலை 6-57 இன்மேல் நற்கரு மங்கள் செய்யலாம். ராகு 12-05—1-35

ஆவ 5 வியா (21-8-86) துவிதியை இரவு 8-43வ. பூரட்டாதி பி.இ 5-53வரை, சித்தம் சுபதினமன்று. ராகு 1-35 3-05

ஆவ 6 வெள் (22-8-86) திரிதியை இரவு 8-27வரை, உத்தரட்டாதி பி.இ 5-53வரை, சித்தம், சுபகரு மங்கட்கு உகந்தது. ராகு 10-35—12-05

ஆவ 7 சனி (23-8-86) சதுர்த்தி இரவு 8-33வரை, ரேவதி முழுவதும், மரணம், அசுபதினம். ராகு 9-05—10-35

ஆவ 8 ஞா (24-8-86) பஞ்சமி-சித்தம் இரவு 9-24வ. ரேவதி காலை 6-57வரை, அவசியகருமங்கள் செய் யலாம். ராகு 4-35—6-05

ஆவ 9 திங் (25-8-86) ஷஷ்டி இரவு 10-56வரை, அசுவினி- சித்தம் காலை 8-44வரை, கரிநாள். சுபகருமங்களை விலக்குக. ராகு 7-35 9-05

ஆவ 10 செவ் (26-8-86) ஸப்தமி பி.இ 12-59வ. பரணி பகல 11-07வரை, சித்தம், கார்த்திகைவிர தம் சுபதினமன்று. ராகு 3-05—4-35

ஆவ 11 புத (27-8-86) அஷ்டமி பி.இ 3-22வரை, கார்த்திகை பகல் 1-55வரை, அமிர்தசித்தம், அசுபதினம் ராகு 12-05—1-35

ஆவ 12 வியா (28-8-86) நவமி பி.இ 5-49வரை, ரோகிணி மாலை 4-54வரை, மரணம் சுபகருமங்க ளை விலக்குக. ராகு 1-35 3-05

ஆவ 13 வெள் (29-8-86) தசமி முழுவதும், மிருக சிரிடம் மாலை 7-50வரை, சித்தம், சுபகருமங்கட்கு உகந்ததினம். ராகு 10-35—12-05

ஆவ 14 சனி (30-8-86) தசமி காலை 8-06வரை, திருவாதிரை, சித்தம் இரவு 10-32வரை, அசுப தினம். ராகு 9-05—10-35

ஆவ 15 ஞாயி (31-8-86) ஏகாதசி பகல் 10-03வரை, புனர்பூசம் இரவு 12-48வரை, சித்தம், ஸர்வஏகா தசிவிரதம் அவசியகருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 4-35—6-05

ஆவ 16 திங் (1-9-86) துவாதசி பகல் 11-31வரை, பூசம் பி.இ 2-34வரை, சித்தம், பிரதோஷவிரதம் சுபகருமங்கட்கு உகந்ததினம். ராகு 7-34—9-04

ஆவ 17 செவ் (2-9-86) திரயோதசி பகல் 12-27வ ஆயிலியம் பி.இ 3-48வரை, சித்தம், அசுபதினம். ராகு 3-04—4-34

ஆவ 18 புத (3-9-86) சதுர்த்தசி பகல் 12-49வரை, மகம் பி.இ 4-31வரை சித்தாமிர்தம், அமாவாசை விரதம் சுபகருமங்களை விலக்குக. ராகு 12-04—1-34

ஆவ 19 வியா (4-9-86) அமாவாசை பகல் 12-41வ; பூரம், சித்தம் பி.இ 4-45வரை, சுபதினமன்று; ராகு 1-34—3-04

ஆவ 20 வெள் (5-9-86) பிரதமை பகல் 12-05 வ. உத்தரம் பி.இ 4-35வரை, சித்தாமிர்தம், சுபகரு மங்களுக்கு உகந்ததினம். ராகு 10-34—12-04

ஆவ 21 சனி (6-9-86) துவிதியை பகல் 11-05வ. அத்தம் பி.இ 4-04வரை, மரணம் சுபதினமன்று. ராகு 9-04—10-34

ஆவ 22 ஞாயி (7-9-86) திரிதியை காலை 9-46வரை, சித்திரை பி.இ 3-17வரை சித்தம், விநாயகசதுர்த்தி விரதம் ராகு 4-34—6-04

ஆவ 23 திங் (8-9-86) சதுர்த்தி காலை 8-11வரை. சுவாதி, அர்தமி பி.இ 2-16வரை, சுபகருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 7-34—9-04

ஆவ 24 செவ் (9-9-86) பஞ்சமி காலை 6-23 வரை, ஷஷ்டி பி.இ 4-24வரை, விசாகம் மரணம் பி.இ 1-04வரை. ஷஷ்டி விரதம் சுபதினமன்று. ராகு 3-04—4-34

ஆவ 25 புத (10-9-86) ஸப்தமி பி.இ 2-17வரை. அனுஷம் இரவு 11-44 வரை, அமிர்தசித்தம், சுப கருமங்கட்கு நன்று. ராகு 12-04—1-34

ஆவ 26 வியா (11-9-86) அஷ்டமி இரவு 12-04வ; கேட்டை- மரணம் இரவு 10-17வரை, அசுபதினம். ராகு 1-34—3-04

ஆவ 27 வெள் (12-9-86) நவமி இரவு 9-48வரை, மூலம்- அமிர்தம் இரவு 8-47வரை, ஆவணிமூலம் சுபகருமங்களை விலக்குக. ராகு 10-34—12-04

ஆவ 28 சனி (13-9-86) தசமி-சித்தம் மாலை 7-32வ. பூராடம் மாலை 7-17வரை, கரிநாள். அசுபதினம். ராகு 9-04—10-34

ஆவ 29 ஞாயி (14-9-86) ஏகாதசி மாலை 5-20வரை, உத்தராடம் மாலை 5-51 வரை, அமிர்தம், ஸர்வ ஏகாதசி விரதம் முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 4-34—6-04

ஆவ 30 திங் (15-9-86) துவாதசி பகல் 3-18வரை, திருவோணம் மாலை 4-34வரை, அமிர்தசித்தம், ஆவணிமூலம், பிரதோஷவிரதம். சுபகருமங்கட்கு நன்று. ராகு 7-34—9-04

ஆவ 31 செவ் (16-9-86) திரயோதசி பகல் 1-30வ: அவிட்டம்- சித்தம் பகல் 3-32வரை, வயல், தோட்டச்செய்கைகள் மேற்கொள்ளலாம். ராகு 3-03—4-33

---

## இலங்கை சோதிட ஆய்வுமன்றம்

மேற்படி மன்றத்தின் 1986-ம் ஆண்டு ஆவணி மாதக் கூட்டம் 9-8-86ல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மு.ப 10½ மணியளவில் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் ஆரம்பமானது. சென்றகூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

காலஞ்சென்ற மேற்படி மன்ற உறுப்பினர்கள் திரு. மு. மூ. மார்க்கண்டுவுக்கும் வ, முருகேசுவுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் பிரம்மஸ்ரீ ந. கந்தசாமி ஐயர் "நல்லூர் கந்தசாமி கோயில் திருவிழாக்கால நிர்ணயம்" பற்றி ஓர் சொற்பொழிவாற்றி அது எவ்வாறு செயல்படவேண்டும் என்ற பிரேரணையை சமர்ப்பித்தார். திரு. வே. சின்னத்துரையால் அது ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதன் பிரதிகள் நல்லூர் கந்தசாமி கோவில் அறங்காவலருக்கும், பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டன. கொடியேற்றம் சஷ்டிதிதியிலும் தீர்த்தம் அமாவாசையிலும் நடைபெற வேண்டும் என்பதை ஐயா அவர்கள் வலியுறுத்தினர்.

அடுத்து இராகு கேது செவ்வாய் மாற்றங்களும் அரசியல் சூழ்நிலையும் என்னும் விஷயம் பற்றி திரு. வே. சின்னத்துரை சொற்பொழிவாற்றினர். ராகு கேது செவ்வாய் மாற்றங்கள் 1947 முதல் எவ்வாறு நாட்டு அரசியல் நிலையைத் தாக்கின என்பதை விரிவாக எடுத்துக்கூறி, மீண்டும் அரசியலில் அனர்த்தங்களை ஏற்படுத்தும் எனவும் விளக்கினர்.

பின்னர் திரு. வே. சின்னத்துரையை பொருளாளராக திரு S- S. நடராசா பிரேரிக்க திரு. R. முத்துலிங்கம் ஆமோதித்தார். "உங்கள் சாதகத்தில் செவ்வாய் தோஷம் உண்டா" என்னும் நூல் திரு. வே. சின்னத்துரையால் வெளியிடப்பட்டது. கூட்டம் 12மணியளவில் நிறைவேறியது.

---

இம்மாத விசேடங்கள் (1-ம் பக்கத் தொடர்ச்சி)

லியவற்றை நிவேதிப்பதும், விநாயகர் அகவல், விநாயகர் புராணம் இவற்றைப் படிப்பதும், கேட்பதும், விநாயகருக்கு உகந்த வழிபாடாகும். துன்பம், நோய், வறுமை முதலியன நீங்கி இன்பமடைவதும், இஷ்டசித்திகளைப் பெறுவதும், இவ்விரதமகிமையைக் கேட்பதால் கர்ப்பவதிகள் சுகப்பிரசவமடைதலும், யாத்திரையில் விரதமகிமையைப் பாராயணம் செய்வதனல் இடர்கள் தீருவதும், சதுர்த்திவிரத மகிமையாக நூல்கள் தெரிவிக்கின்றன.

## ஆவணி மூலம்

இச்சையே பிறவிக்குக்காரணமென்றும், பிறவித்துன்பத்தை நீக்குவதற்கு சிவப்பற்றே வேண்டும் எனவும் துணிந்து பாண்டியராசன் குதிரை கொள்வதற்காகக் கொடுத்தபொருளை இறைபணிக்காக அர்ப்பணித்து, திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருந்த பரமாசாரியாரிடம் அடிமைபூண்ட திருவாதவூரடிகளாகும் மணிவாசகப்பெருமானை ஆண்டருளுவதற்காக, சோமசுந்தரக்கடவுளாகத் தோன்றிய இறைவன். நான்மறை அறங்களோங்கவும், மேன்மைகொள் சைவநீதி விளங்கவும் குதிரை வர்த்தகராக மதுரைநகரில் எழுந்தருளிய புண்ணியதினமே ஆவணிமூல நன்னாளாகும். இறைவனின் அறுபத்திநான்கு திருவிளையாடல்களுள் விளங்கும் இவ்விழாவையும் நாம் நினைவுகூர்ந்து இறைவனருள் பெறுவோமாக.

## உதயலக்கினம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### க்ஷய ஸ்ரீ ஆவணி மீ 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை. (17-8-86 முதல் 16-9-86 வரை)

| இங் | தமி | வாரம் | சிங்கம் | | கன்னி | துலா | விருச்சி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் | மேடம் | இடபம் | மிதுன | கடகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகஸ் | ஆவ | | ம.மி. முதல் (காலை) | ம.மி. வரை | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பி.ப) | மி. ம. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை) (பி.இ) |
| 17 | 1 | ஞாயி | 6 5 | 8 6 | 10 4 | 12 8 | 2 19 | 4 27 | 6 23 | 8 8 | 9 50 | 11 40 | 1 42 | 3 53 | 6 1 |
| 18 | 2 | திங் | 6 2 | 8 2 | 9 58 | 12 4 | 2 15 | 4 23 | 6 19 | 8 4 | 9 46 | 11 36 | 1 38 | 3 49 | 5 57 |
| 19 | 3 | செவ் | 5 58 | 7 58 | 9 54 | 12 00 | 2 11 | 4 19 | 6 15 | 8 00 | 9 42 | 11 32 | 1 34 | 3 45 | 5 53 |
| 20 | 4 | புதன் | 5 54 | 7 54 | 9 50 | 11 56 | 2 7 | 4 15 | 6 11 | 7 56 | 9 38 | 11 28 | 1 30 | 3 41 | 5 49 |
| 21 | 5 | வியா | 5 50 | 7 51 | 9 47 | 11 53 | 2 4 | 4 12 | 6 8 | 7 53 | 9 35 | 11 25 | 1 27 | 3 38 | 5 46 |
| 22 | 6 | வெள் | 5 47 | 7 47 | 9 43 | 11 49 | 2 0 | 4 8 | 6 4 | 7 49 | 9 31 | 11 21 | 1 23 | 3 34 | 5 42 |
| 23 | 7 | சனி | 5 43 | 7 43 | 9 39 | 11 45 | 1 56 | 4 4 | 6 00 | 7 45 | 9 27 | 11 17 | 1 19 | 3 30 | 5 38 |
| 24 | 8 | ஞாயி | 5 39 | 7 39 | 9 35 | 11 41 | 1 52 | 4 00 | 5 56 | 7 41 | 9 23 | 11 13 | 1 15 | 3 26 | 5 34 |
| 25 | 9 | திங் | 5 35 | 7 35 | 9 31 | 11 37 | 1 48 | 3 56 | 5 52 | 7 37 | 9 19 | 11 9 | 1 11 | 3 22 | 5 30 |
| 26 | 10 | செவ் | 5 31 | 7 31 | 9 27 | 11 33 | 1 44 | 3 52 | 5 48 | 7 33 | 9 15 | 11 5 | 1 7 | 3 18 | 5 26 |
| 27 | 11 | புதன் | 5 27 | 7 27 | 9 23 | 11 29 | 1 40 | 3 48 | 5 44 | 7 29 | 9 11 | 11 1 | 1 3 | 3 14 | 5 22 |
| 28 | 12 | வியா | 5 23 | 7 23 | 9 19 | 11 25 | 1 36 | 3 44 | 5 40 | 7 25 | 9 7 | 10 57 | 12 59 | 3 10 | 5 18 |
| 29 | 13 | வெள் | 5 19 | 7 20 | 9 16 | 11 22 | 1 33 | 3 41 | 5 37 | 7 22 | 9 4 | 10 54 | 12 56 | 3 7 | 5 15 |
| 30 | 14 | சனி | 5 16 | 7 16 | 9 12 | 11 18 | 1 29 | 3 37 | 5 33 | 7 18 | 9 00 | 10 50 | 12 52 | 3 3 | 5 11 |
| 31 | 15 | ஞாயி | 5 12 | 7 12 | 9 8 | 11 14 | 1 25 | 3 33 | 5 29 | 7 14 | 8 56 | 10 46 | 12 48 | 2 59 | 5 7 |
| செப் | | | | | | | | | | | | | | | |
| 1 | 16 | திங் | 5 8 | 7 7 | 9 3 | 11 9 | 1 20 | 3 28 | 5 24 | 7 9 | 8 51 | 10 41 | 12 43 | 2 54 | 5 2 |
| 2 | 17 | செவ் | 5 3 | 7 3 | 8 59 | 11 5 | 1 16 | 3 24 | 5 20 | 7 5 | 8 47 | 10 37 | 12 39 | 2 50 | 4 58 |
| 3 | 18 | புதன் | 4 59 | 6 59 | 8 55 | 11 1 | 1 12 | 3 20 | 5 16 | 7 1 | 8 43 | 10 33 | 12 35 | 2 46 | 4 54 |
| 4 | 19 | வியா | 4 55 | 6 55 | 8 51 | 10 57 | 1 8 | 3 16 | 5 12 | 6 57 | 8 39 | 10 29 | 12 31 | 2 42 | 4 50 |
| 5 | 20 | வெள் | 4 51 | 6 51 | 8 47 | 10 53 | 1 4 | 3 12 | 5 8 | 6 53 | 8 35 | 10 25 | 12 27 | 2 38 | 4 46 |
| 6 | 21 | சனி | 4 47 | 6 47 | 8 43 | 10 49 | 1 00 | 3 8 | 5 4 | 6 49 | 8 31 | 10 21 | 12 23 | 2 34 | 4 42 |
| 7 | 22 | ஞாயி | 4 43 | 6 43 | 8 39 | 10 45 | 12 56 | 3 4 | 5 00 | 6 45 | 8 27 | 10 17 | 12 19 | 2 30 | 4 38 |
| 8 | 23 | திங் | 4 39 | 6 39 | 8 35 | 10 41 | 12 52 | 3 00 | 4 56 | 6 41 | 8 23 | 10 13 | 12 15 | 2 26 | 4 34 |
| 9 | 24 | செவ் | 4 35 | 6 36 | 8 32 | 10 38 | 12 49 | 2 57 | 4 53 | 6 38 | 8 20 | 10 10 | 12 12 | 2 23 | 4 31 |
| 10 | 25 | புதன் | 4 32 | 6 32 | 8 28 | 10 34 | 12 45 | 2 53 | 4 49 | 6 34 | 8 16 | 10 6 | 12 8 | 2 19 | 4 27 |
| 11 | 26 | வியா | 4 28 | 6 28 | 8 24 | 10 30 | 12 41 | 2 49 | 4 45 | 6 30 | 8 12 | 10 2 | 12 4 | 2 15 | 4 23 |
| 12 | 27 | வெள் | 4 24 | 6 24 | 8 20 | 10 26 | 12 37 | 2 45 | 4 41 | 6 26 | 8 8 | 9 58 | 12 00 | 2 11 | 4 19 |
| 13 | 28 | சனி | 4 20 | 6 20 | 8 16 | 10 22 | 12 33 | 2 41 | 4 37 | 6 22 | 8 4 | 9 54 | 11 56 | 2 7 | 4 15 |
| 14 | 29 | ஞாயி | 4 16 | 6 16 | 8 12 | 10 18 | 12 29 | 2 37 | 4 33 | 6 18 | 8 00 | 9 50 | 11 52 | 2 3 | 4 11 |
| 15 | 30 | திங் | 4 12 | 6 11 | 8 7 | 10 13 | 12 24 | 2 32 | 4 28 | 6 13 | 7 55 | 9 45 | 11 47 | 1 58 | 4 6 |
| 16 | 31 | செவ் | 4 7 | 6 7 | **8 3** | **10 9** | 12 20 | 2 28 | 4 24 | 6 9 | 7 51 | 9 41 | 11 43 | 1 54 | 4 2 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து சொல்லலாம்.

உ-ம்: ஆவணி 31உ. (16-9-86) காலை 9-30 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (8-03—10-09) துலாலக்னம்

# ஆவணி மாதக் கிரகநிலை

| | மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் | |
|---|---|---|---|---|---|
| | | ராகு | | | |
| கும்பம் | குரு | ஆடி மாதக் கிரக நிலை | | புத | கடகம் |
| மகரம் | | | | சூ | சிங்கம் |
| | செவ் நெப் | யூரே,சனி | கேது | சுக் | |
| | தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி | |

## கிரக மாற்றங்கள்

2உ (18-8-86) மாலை 5-45க்கு மீன-ராகு
2உ (18-8-86) மாலை 5-45க்கு கன்-கேது
10உ (26-8-86) பி இ. 3-40க்கு சிங்-புத
15உ (31-8-86) பகல் 3-27க்கு துலா-சுக்
26உ (11-9-86) மாலை 6-27க்கு கன்-புத
7உ புதன் அஸ்தமனம்
13உ யுரேனஸ் வக்ரத்தியாகம்
31உ நெப்டியூன் வக்ரத்தியாகம்
குரு இம்மாதம் வக்கிரத்திலே சஞ்சரிக்கின்றது.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆவ | 1உ | (17-8-86) | மாலை | 5-49 | முதல் | மகரம் |
| | 3உ | (19-8-86) | மாலை | 7-38 | ,, | கும்பம் |
| | 5உ | (21-8-86) | இரவு | 11-35 | ,, | மீனம் |
| | 8உ | (24-8-86) | காலை | 6-57 | ,, | மேடம் |
| | 10உ | (26-8-86) | மாலை | 5-47 | ,, | இடபம் |
| | 13உ | (29-8-86) | காலை | 6-23 | ,, | மிதுனம் |
| | 15உ | (31-8-86) | மாலை | 6-17 | ,, | கடகம் |
| | 17உ | (2-9-86) | பி. இ. | 3-48 | ,, | சிங்கம் |
| | 20உ | (5-9-86) | பகல் | 10-44 | ,, | கன்னி |
| | 22உ | (7-9-86) | பகல் | 3-42 | ,, | துலாம் |
| | 24உ | (9-9-86) | மாலை | 7-23 | ,, | விருச்சிகம் |
| | 26உ | (11-9-86) | இரவு | 10-17 | ,, | தனுசு |
| | 28உ | (13-9-86) | இரவு | 12-54 | ,, | மகரம் |
| | 30உ | (15-9-86) | பி.இ. | 4-00 | ,, | கும்பம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி ஆவணி மீ 31உ காலை 9-30 மணிக்கு துலா லக்னம் என அறிந்து கொண்ட பின் 'துலாம்' என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1 முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

ஆவணிமாதம் பிறக்கும்போது மிதுன லக்கினம் உதயமாகிறது. இலக்கினத்தை வியாழன் திருஷ்டிப்பதால் பலவகையாலும் முன்னேற்றம் தென்படும். ஆயினும் சூரியன்-சனியின் பார்வையைப் பெறுவதால் அரசியல் நிலைமையிலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் கஷ்டபலன்கள் காணும். அரசியல் தலைவர்களுக்குள் மனவேறுபாடுகள் தோன்றும். நாட்டின் நிலைமையைப் பொறுத்தமட்டில் இடையிடையே பாதிப்புகள் உண்டு.

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவாகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது;

## (ஆவணி மாதம் 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 05 நிமிஷம்)

| வாரம் | 6...05 7...05 | 7...05 8...05 | 8...05 9...05 | 9...05 10...05 | 10...05 11...05 | 11...05 12...05 | 12...05 1...05 | 1...05 2...05 | 2...05 3...05 | 3...05 4...05 | 4...05 5...05 | 5...05 6..05 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்;

# ஆவணி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

**17-8-86 — 16-9-86**

| | | |
|---|---|---|
| சூரியன்:- | 17-8-86 | பி.இரவு மணி 2-01 (A.M)ல் சிங்கராசிப் பிரவேசம். |
| | 17-8-86 | உதயம் காலை 6 05<br>அஸ்தமனம் மாலை 6-24 |
| | 16-9 86 | உதயம் காலை 6 03<br>அஸ்தமனம் மாலை 6-07 |
| சந்திரன்:- | 20-8 86 | பூரணை இரவு 12-35 A.M |
| | 28-8-86 | அபரஅஷ்டமி இரவு 3-32 A.M |
| | 4-9-86 | அமாவாசை பகல் 12-41 |
| | 5-9-86 | சந்திரதர்சனம் |
| | 12-9 86 | பூர்வஅஷ்டமி இரவு 12-04 A.M |

## கிரகங்கள்

புதன்:- மாத ஆரம்பத்தில் சூரியஉதயம் முன் கீழ்வானில் 18பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் நாளடைவில் உயரங்குறைந்து 23-8-86ல் கிழக்கில் அஸ்தமனமாவதினால் இம் மாசத்தில் மேலும் இதனைப்பார்க்க முடியாது. 26-8-86ல் சிங்கராசியிலும் 11-9-86ல் கன்னிராசியிலும் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்:- மாசஆரம்பத்தில் சூரியாஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 45பாகை உயரத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும இக்கிரகம் 27-8-86ல் சூரியனிலிருந்து கூடியதூரம் பிரிந்து 46பாகை உயரத்திற் காணப்படும் பின் அதன் உயரம் குறையத்தொடங்கும். மாதமுடிவில் அதன் உயரம் 44பாகை ஆகவிருக்கும். 31-8-86ல் துலாராசியில் பிரவேசிக்கிறது.

செவ்வாய்:- மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின்மேல் கீழ்வானில் 42பாகை உயரத்திற்காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 64பாகை உயரத்திற் காணப்படும். இம்மாசம் முழுவதும் தனுராசியிலேயே சஞ்சரிக்கிறது.

வியாழன்:- மாத ஆரம்பத்தில் சூரியஉதயம் முன் மேற்குவானில் 28பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் மாதமுடிவில் சூரிய அஸ்தமனத்தின் பின் கீழ்வானில் 6பாகை உயரத்திற் காணப்படும். கும்பராசியில் வக்கிரகதியில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 22-8-86ல் பூரட்டாதி 2-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

சனி:- மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் பின் கிழக்குவானில் 80பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் உச்சிக்கு மேற்கே 19பாகை சரிந்துகாணப்படும். 3-9-86ல் விருச்சிக ராசியில் அனுஷம் 3-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

இந்திரன்:- வக்கிரகதியில் விருச்சிகராசியில் கேட்டை 3ம்பாதத்தில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 29-8-86ல் வக்கிரகதிநீங்கி நேரியகதியிற் செல்லும்.

வருணன்:- வக்கிரகதியில் தனுராசியில் மூலம் 3ம்பாதத்திற் சஞ்சரிக்கும் இக்கிரகம் 16-9-86ல் வக்கிரகதிநீங்க நேர்கதியிற் செல்லும்.

குபேரன்:- துலாராசியில் சுவாதி 3-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

## சமாகமாதிகள்

21-8 86 மாலை சந்திரனுக்கு வடக்கு வியாழன், சூரியஉதயம் முன் அவதானிக்கவும்.

31-8 86 முன்னிரவு சுக்கிரனுக்கு வடக்கு சித்திரை நக்ஷத்திரம் ½பாகை

7-9-86 நள்ளிரவு சந்திரனுக்குத் தெற்கு சுக்கிரன் 3பாகை. சந்திர அஸ்தமனத்துக்கு முன் அவதானிக்கவும்.

10 9-86 பிற்பகல் சந்திரனுக்கு வடக்கு சனி 5பாகை. அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

10-9-86 நள்ளிரவு சந்திரனுக்குத் தெற்கு கேட்டை நக்ஷத்திரம் ½பாகை.

13-9-86 பிற்பகல் சந்திரனுக்கு வடக்கு செவவாய் ½பாகை அஸ்தமனத்தின் பின் பார்க்கவும்.

# சோதிடம் கற்போம்

''ஞானி''

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## பதினோராம் பாவம் (இலாப பாவம்)

பதினோராம் பாவத்தின் முதன்மையான காரகம் இலாபமாதலின் இது இலாப பாவம் எனப்படும். இப்பாவத்தின் காரகங்கள் இலாபம், காது, இராசவித்தை, ஏவலர் மூத்த சகோதரம், சிநேகிதர், சூழல், வர்த்தகம் ஆதியனவாகும்.

ஏனைய பாவங்களுக்கும் இதற்கும் ஒரு பிரதான வித்தியாசமுண்டு. இப்பாவத்தில் சுபர், பாபர் யாரிருந்தாலும் அவர்கள் நற்பலனையே கொடுப்பர்.

கோசார சஞ்சாரத்தில் பதினொன்றில் எக்கிரகம் நிற்பினும் சுபர், பாபர் என்ற பேதமின்றி அந்நிலைக்கு நற்பலனே கூறல் வேண்டும்.

எக்காலத்தில் நிகழும் பலன் ஆராயப்படுகின்றதோ அக்காலத்தில் கிரகங்கள் சஞ்சரிக்கும் தானங்களுக்குரிய பலனையே கோசாரபலன் என்று சொல்லப்படும்.

சென்மலக்கினம், சந்திரலக்கினம் இரண்டினுள் சந்திரலக்கினத்தை ஆதியாகக் கொண்டு கிரகங்கள் சஞ்சரிக்கும் இடங்களின் பலனை நிதானித்து கோசாரபலன் கூறப்படும். இதனுடன் மகாதசாபுத்தி பலனையுஞ் சேர்த்து ஒருவரின் காலபலனை நிச்சயித்தல் வேண்டும். தசாபுக்தி பலன், கோசாரபலன் இரண்டும் நன்றாக இருப்பின் உத்தமபலனும், ஒன்று மட்டும் நன்றாயிருப்பின் மத்திமபலனும், இரண்டும் பழுதாகின் அதமபலனும் கூறவேண்டும்.

பதினோராம் பாவத்திலுள்ள கிரகங்களெல்லாம் நற்பலனைக் கொடுக்குமெனக் கூறப்பட்டது தானபலன் மாத்திரமே குறிக்கப்படும். ஆதிபத்தியம், திருஷ்டி, ஆகியவற்றின் மூலம் ஏற்படும் பெலவீனங்கள் பதினோராம் வீட்டிலுள்ள கிரகங்களின் பலனைப் பாதிக்கமாட்டா என்று கொள்ளக்கூடாது. இலாபஸ்தானத்தில் நிற்பதால் அதிகஷ்டத்தைச் செய்யா என அறிக.

பதினோராம் பாவத்துக்குரிய சில பலன்கள் அவற்றுக்குரிய ஏதுக்களுடன் கீழே காணலாம்.

1. லாபத்தானாதிபதி உச்சம்பெற்றிருப்பினும், கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும், லாபத்தானம் சுபர் மத்தியமாயிருந்தாலும் தனலாபமுண்டாகும்.

2. பத்தாம்வீட்டதிபதி சுபக்கிரகமாகி, சுபனாகிய பதினோராம் வீட்டதிபனோடு கூடி சுபத்தானத்திலிருந்தால் சாதகன்தனது சொந்தமுயற்சியாற் பணமீட்டித் தனவானாவான்.

3. 11-ம் வீட்டதிபதியின் நவாம்சாதிபன் சுபக்கிரகமாகிச் சுபர் மத்தியம் பெற்றால் செல்வந்தனாவான்.

4. 2-ம் 4-ம் வீட்டதிபதிகளினால் லாபஸ்தானாதிபதி பார்க்கப்பட்டுப் பாக்கியாதிபதியுடன் கூடியிருந்தால் வீடு வாகனச் சிறப்புடைய தனவானாவான்.

5. லாபத்தானாதிபன் இருக்கும் திரேக்காணாதிபன் சுபக்கிரகமாக 10-ம் வீட்டதிபனின் பார்வை பெற்றால் தனலாபஞ் சித்திக்கும்.


6. லாபாதிபன் அல்லது தனாதிபனுக்குரிய திக்கிலிருந்து பொருள்சேரும்.

7. லாபத்தானத்திற் பாபக்கிரகமிருக்க லாபாதிபதியும் பாபர் சம்பந்தமுறின் லாபத்தடையுண்டாகும்.

8. 11-ம் வீடு பெலமடைந்தால் மூத்த சகோதரருக்கு நன்மையுண்டாகும்.

9. 11-ம் அதிபதியும், மூன்றாதிபதியும் பெலவீனப்படின் காதுநோய் ஏற்படலாகும்.

(தொடரும்)




இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

**17-8-86 முதல் 16-9-86 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய மூக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 5ல் ரஜஸ மூர்த்தியாகிச் சமபலத்துடன் சஞ்சாரம் செய்வதால் நன்மை கலந்த தியபலன்கள் நிகழும். அட்டமச் சனீஸ்வரனின் கோசாரம் நிகழினும் குருபகவான் லாபத்தில் பலம்பெறுதலின் எதையும் சமாளித்துக்கொள்ளுவார்கள். ஜென்மத்தில் சஞ்சாரம் செய்துவந்த ராகு 12லும், 7ல் சஞ்சாரம் செய்துவந்த கேது 6லுமாக 18-8-86ல் இராசிமாறுவதும் இவர்களின் வாழ்க்கையில் திருப்பங்களை ஏற்படுத்தக்கூடும். பொதுவாக உடல்நலம் சீராக இருக்கும். பொருள் வருமானமும் திருப்திதரும். சிலருக்கு அந்நிய தேசப் பொருள்வரவு கூடக்கிட்டும்.

குடும்பத்தில் நல்லுறவு வளர்ச்சியுறும். பெரியவர்கள் உதவிகள் - புத்திரர் உதவிகள் கிடைக்கும். குடும்பவருமானமும் முன்னேற்றம் காணும். இனபந்துக்கள் கொண்டாட்டங்களும் நிகழும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரி பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்தலின் மூன் முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிடையாது. வாடிக்கையாளரின் வரவும் குன்றும். கடன்நிலுவைகள் சங்கடம் தரும். ஆனால் வங்கி - நிதி உதவிகள் திருப்தியளிக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். அதேநேரத்தில் வேலைப் பொறுப்புக்களும் கூடுதலாகச் சுமக்கும்படிநேரும். சக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்ச்சேதமே அதிகரிக்கும். பசளை மானியம் முதலியன சமயத்தில் கிடையாது. கூலியாட்களுடைய கெடுபிடிகள் அதிகரிக்கும். விளைவுகளுக்கு நியாயமான சந்தைவாய்ப்பும் கிடையாது.

தொழிலாளருக்கு வேலைவாய்ப்புக்கள் குறையும். தொழில்பிணக்குகளும் பெருகும். தினக்கூலியாட்களின் சீவியம் கஷ்டம்தரும். தொழில் ஒப்பந்தங்களும் பிரச்சினை தரும்.

மாணவர் கல்விக்குழப்பநிலை ஏற்படினும் கல்வி ஊக்கம் ஆச்சம்தரும். ஆசிரியர் - மாணவர் கருத்து வேறுபாடுகள் ஓரளவு குறைவுறும். கல்வித் தேர்ச்சி ஓரளவு திருப்திதரும்.

பெண்களுக்கு மனநிறைவான காலம். கணவன்மாரின் அன்பும் நல்லெண்ணமும் கிடைக்கும். தடைப்பட்டிருந்த விவாகமுயற்சிகள் கைகூடி வரும். வேலைக்குப்போகும் பெண்களுக்கும் மனநிறைவு கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: ஆக 20,21,24ப,25,26ப,29,30
செப் 4 5மு.ப,12,13

துரதிஷ்டநாட்கள்: ஆக 22,23,24காலை
செப் 6,7பகல்,10,11.




கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசிரிடம் 1,2-ம் கால்

இந்த இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 4ல் லோகமூர்த்தியாகி சஞ்சாரம் செய்வது நற்பலன்களிலும் தீயபலன்களே அதிகம் நிகழவேண்டும். செவ்வாய்- குரு- சனி இவர்களின் கோசாரமும் பலக்குறைவையே காட்டுகின்றன. பொதுவாக இவர்களின் தேகநிலை அடிக்கடி பாதிப்புறநேரும். வருமானம் குறைவுறும். எதிலும் எதிர்பாராத திடீர்நெருக்கடிகள் காரியதாமதம்- கடன்பயம்- இராசபயம்- விபத்து- அவமிருத்துப்பயங்கள் கூடச்சிலருக்கு நிகழும். எவ்வாறு யினும் இவர்களுக்கு இந்தமாதம் எண்ணங்களுக்கு எதிர்மாறுகவே பெரும்பாலும் கருமங்கள் நிகழும்.

குடும்பத்தவர்களுக்குக் கணவன் மனைவி பிணக்குகள் அடிக்கடி ஏற்படும். வருமானத்திலும் குடும்பச்செலவுகள் அதிகரிக்கும். புத்திரர்களால் துன்பங்கள் ஏற்படும். கடன்பழு ஏறும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை இந்த மாதமும் தொடரும். கடைஅடைப்பு முதலிய காரணங்களால் வாடிக்கையாளரின் வரவும் ஆதரவும் குன்றும். முன்யோசனையுடன் கூடியநிதானம் இவர்களுக்கு உதவிசெய்யும்.

உத்தியோகத்தர்களுக்கு பதவிப்பொறுப்புகள் கூடும். ஆனல் அதிகாரிகளின் நெருக்குதல்களும் இருக்கும். சக உத்தியோகத்தர்களின் உதவிகள் குறைவுறும். சிலருக்குக் கஷ்டப்பிரதேச இடமாற்றம் அல்லது பதவிநீக்கம் கூடக்கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்ச்சேதம் கவலைதரும். பண்ணைவிவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுகள் ஏறும். கூலியாட்களும் பிரச்சினைதருவர். விளைவுகளுக்கு நியாயமான சந்தைவாய்ப்பும் கிடையாது.

தொழிலாளர் மத்தியில் வேலையின்மைப் பிரச்சினைகள் ஏற்படும். வேலைகிடைப்பினும் நியாயமான கூலிகிடையாது. தொழிலாளர் பிணக்குகள் வலுவடையும். நாட்கூலியாட்கள் அன்றாட சீவியமும் கஷ்டம் தரும்.

மாணவர் கல்விவளர்ச்சிக்குத் தடைகள் பலவிதத்திலும் ஏற்படும்- ஆசிரியர்- மாணவர் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். பரீட்சை முடிவுகளும் ஏமாற்றம் தரும்.

பெண்களுக்குச் சோதனையானகாலம். விவாக முயற்சிகள் செலவும் ஏமாற்றமும் தந்தாலும் ஆச்சரியமில்லை. குடும்பப்பெண்களுக்கு வரவுக்கு மிஞ்சியசெலவும்- குடும்பபாரமும் கவலைதரும்.

அதிஷ்டநாட்கள்: ஆக 18,22,23,27,28
செப் 1,2 6,14,15

துரதிஷ்டநாட்கள்: ஆக 17பகல்,24பகல்,25,26பக
செப் 8,9பகல்,12.13




மிருகசிரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

மிதுனராசியில் பிறந்தவர்களுக்குச் சூரியபகவான் இந்தமாதம் 3ல் தாம்பர மூர்த்தியாகிப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நன்மை கலந்த தீயபலன்களே அதிகம் நிகழும். சூரியனின் மூர்த்திபலம் குறைந்தாலும் கோசாரபலம் பெறுவதும், குருவின் திருஷ்டியுடன் கூடிய கோசார பலமும் இவர்களுக்கு எதனையும் சமாளித்துக் கொள்ள உதவும். தேகசுகம் சீராகஇருக்கும் ஆனல் குடும்பசுகம் பாதிப்படையும். வருமானம் கணிசமான அளவுகூடும். அதிகாரிகள்- பெரியவர்களின் உதவிகளும் கிடைக்கும். தடைதாமதங்க

ளுக்குமேல் காரியசித்தியும் பெறுவர். சிலருக்கு அந்நியநாட்டுப் பொருள்வரவுகள் கூடக்கிடைக்கும்.

குடும்பத்தில் நல்லுறவு வளர்ந்தாலும் குடும்ப சுகவீனம் துன்பம்தரும். குடும்பவருமானம் பெருகும். குடும்பத்தில் மங்களநிகழ்வுகள் நிகழும். புதிரர் உதவிகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் காணும். புதுமுதலீடுகளை ஆரம்பிக்க ஏற்றகாலம். பங்கு முதலீடுகளில் லாபம் குறையும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்கள் அதிகலாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் குறைவதால் அதிகாரிகளின் சீற்றங்களை அடிக்கடி சமாளிக்க வேண்டிநேரும். கோசார பலம் பெறுவதால் எதனையும் சமாளிப்பார்கள். சக ஊழியரின் உதவிகள் ஆறுதல்தரும்.

விவசாயிகளுக்குச் சனிபலம் பெறுவது நன்றாகும். பயிர்ச்செழிப்பும் விளைவும் அதிகரிக்கும். விவசாயப்பண்ணை உற்பத்தியும் கூடும். நல்ல சந்தைவாய்ப்புக்களும் கிடைக்கும்.

தொழிலாளர்களுக்கு வேலைவசதிகள் கிடைக்கும். தொழில் ஒப்பந்தவேலைகளும் லாபம்தரும். இரும்பு- எண்ணெய்த் தொழிற்சாலை ஊழியர் வருமானம் கூடும். நாட்சம்பளத் தொழிலாளர் வாழ்க்கைத்தரமும் உயரும்.

மாணவர் கல்விஊக்கம் வளரும். ஆசிரியர் மாணவர் நல்லுறவும் வளரும். சிறப்பாகச் சட்டத்துறை மாணவர் சிறப்புச்சித்தியும் புலமைப் பரிசில்களும் கூடப்பெறுவர். கல்வித்தேர்ச்சி மன நிறைவைக் கொடுக்கும்.

பெண்களுக்குச் செவ்வாய் 7ல்குரூர கோசாரத்தில் சஞ்சாரம் செய்தலின் எண்ணங்களுக்கு எதிர்பாராத தடைதாமதங்கள் ஏற்படும். சிலருக்கு விவாகசித்திகள் ஏற்படினும் சிக்கல்களும் இருக்கவே செய்யும். குடும்பப்பெண்களுக்குச் கணவன் மாரின் சுகவீனம் முதலிய துன்பங்களும்இருக்கும்.

அதிஷ்டநாட்கள்: ஆக 20,21,25,29,30
செப் 4,7இர,8,9பக

துரதிஷ்டநாட்கள்! ஆக 17இரவு,18,19ப,27,28
செப் 9இர,10,11,14,15



# கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

இந்தராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 2ல் சுவர்ணமூர்த்தியாகி மூர்த்திபலம் பெறுவது நன்மையாகும். ஆனால் இவர் தானபலம் குன்றுதலால் தீமைகளும் இடம்பெறும். மேலும் குரு அட்டமத்தில் சஞ்சாரம் செய்வதும் சுப பலன்களுக்குத் தடையாக அமையும். பொதுவாக இவர்களின் உடல்சுகம் சுமாராக இருப்பினும் மனநிலை அமைதிக்குறைவைக் கொடுக்கும். வருமானம் வீழ்ச்சியடையும். நண்பர்களும் விரோதிகளாகி விடுவார்கள். குரு முதலிய பெரியவர்களின் பகை விரோதங்களும் ஏற்படும். அந்நியர் துன்பம், அலைச்சல், தேசசஞ்சாரம் முதலியனவும் சிலருக்கு இடம்பெறும். இஷ்டதெய்வ பக்திவழிபாடுகள் இவர்களுக்கு ஆறுதல் தரும்.

குடும்பத்தில் பிணக்குகள்- பிரிவுகள்கூட ஏற்படும். குடும்பவருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். கணவன் மனைவி உறவுகளும் சீர்கெடும். மித்திரர் துன்பம் தொடரும்.கடன்பயம் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளால் எதிர்பார்த்த லாபம் கிடையாது. வியாபாரம் பெரிதும் வீழ்ச்சியடையும். வாடிக்கையாளர் வருகையும் குன்றும். வங்கிநிதி வசதிகளும் திருப்திதராது. புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். ஆனால் வேலைப் பொறுப்புகளும் அதிகரிக்கும். சக ஊழியர் ஒத்துழைப்பும் குறைவுறும். எப்படியாயினும் பதவிக்கேற்ற சிறப்புக்கிடைப்பது சந்தேகமே.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச்செலவுகள் அதிகரிக்கும். பயிரழிவால் விளைவுகள் குறையும். விவசாயப்பண்ணைகளில் உற்பத்தி வீழ்ச்சியடையும். கூலியாட்களும் பிரச்சினைதருவர். சந்தை வாய்ப்பிலும் திருப்தியில்லை.

தொழிலாளருக்கு வேலைவாய்ப்புக்கள் குறைவுறும். தினக்கூலி வேலைசெய்வோர் சீவியக்கஷ்டம் தொடரும். கடன்பழு ஏறும். தொழிலாளர் மத்தியில் அமைதியின்மை- பிணக்குகளும் அவ்வப்போது தோன்றும்.

மாணவர் கல்விவளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகள் அதிகரித்தாலும் சுயமுயற்சியால் கல்வித் தேர்ச்சி பெறுவர்- கணித- விஞ்ஞானத்துறை மாணவர் சிறப்புச்சித்தியும் பெறுவர். சிலருக்கு வெளிநாட்டுக் கல்விவாய்ப்பும் கிடைக்கலாம்.

பெண்களுக்குக் குடும்பத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். விவாகாதி மங்களமுயற்சிகளுக்குத் தடைகளே அதிகரிக்கும். கன்னிப்பெண்கள் எதிலும் உணர்ச்சி வசப்படாமல் நிதானமாகச் செயற்பட வேண்டியகாலம் இது.

அதிஷ்டநாட்கள்: ஆக 22,23,24காலை,27,28
செப் 1,2,6,7பக,9இர,10,11

துரதிஷ்டநாட்கள்: ஆக 17ப,20,21,29,30,31ப
செப் 12,13,16வைகறை




மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் சென்மத்தில் ரஜஸமூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்கிறார். குருவைத் தவிரமற்றப் பிரதான கிரகங்களான சனீஸ்வரன். செவ்வாய் ராகு இவர்களின் தீயசஞ்சாரமும் தாக்குகின்றன. எவ்வாறாயினும் குருவின் கேந்திரதிருஷ்டி இவர்களுக்கு ஆறுதலளிக்கவே செய்யும். பொதுவாக இவர்களின் தேகபலன் சீராக இருக்கும். வருமானத்திலும் செலவுகள் கூடும். உற்றார் உறவினர்களைத் திருப்திப்படுத்த வேண்டிச் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தங்களால் சங்கடங்களில் மாட்டிக் கொள்ளவும் நேரிடலாம். அவமானம் பதவியிழப்பு அன்னிய தேசசஞ்சாரம் முதலான பலன்களும் சிலருக்கு நிகழலாம். உண்மையான மதபக்தி தெய்வபக்திதான் இவர்களுக்கு ஆறுதல் தரும்.

குடும்பத்தில் கணவன் மனைவி நல்லுறவு வளரும். குடும்பவருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். குடும்பப் பெரியவர்கள் ஆதரவுகள் கிடைக்கும். உற்றார் உறவினர்களுடன் பகை-விரோதங்களும் ஏற்படும். புத்திரர் துன்பங்களும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு இந்தமாதம் வியாபாரம் மத்திமநிலையடையும். லாபம் குறைவுறும். கடல்கடந்த ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள் வருமானத்திலும் வீழ்ச்சிகாணும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கோபத்துக்குள்ளாக வேண்டியநிலை அடிக்கடி ஏற்படும். சக ஊழியரின் ஒத்துழைப்பால் எதனையும் சமாளித்து விடுவார்கள். ஆனால் பொதுசன விரோதமும் இவர்களுக்கு ஏற்படும்.

விவசாயிகளுக்குப் பயிர்ச்சேதம் ஏற்படினும், விளைவும் ஓரளவு திருப்திதரும். உற்பத்திச்செலவுகள் அதிகரிக்கும், சிலர் தரகர் முதலியவர்களின் சுரண்டல்களால் பாதிப்படைவர். விவசாயப்பண்ணையிலும் சமவரவு கிடைக்கும்.

தொழிலாளருக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைத்தாலும் வேலைக்கேற்ற வேதனம் கிடையாது. தொழில் ஒப்பந்தங்களில் வேலைசெய்வோர் நல்ல வருமானம் பெறுவர். தினக்கூலிகள் சீவியம் சுமாராக இருக்கும்.

மாணவர் கல்விவளர்ச்சிக்கான காரணிகள் ஏற்படும். ஆசிரியர் மாணவர் நல்லுறவும் ஒத்துழைப்பும் ஏற்படும். சட்டத்துறைமாணவர் கல்வி வளர்ச்சியடையும். சிலருக்குப் புலமைப்பரிசில்கள் கூடக்கிடைக்கும்.

பெண்களுக்குப் பெரியவர்களின் ஆதரவு கிடைக்குங்காலம். ஆனால் சிலவேண்டாத மனிதர்களின் சகவாசத்தால் சங்கடங்களும் ஏற்படஇடமுண்டு. கன்னிப்பெண்களின் விவாகமுயற்சிகள் கைகூடிவரச் சாதகமானகாலம். உறவினர்களுக்குள் பகைவிரோதங்களும் இடைக்கிடை ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: ஆக 17ப,24ப,25,29,30
செப் 4,7இ,8 9ப,12,3

துரதிஷ்டநாட்கள்: ஆக 17இ,18,19ப,22,23
செப் 1,2,14,15




உத்தரம் 2 3,4, அத்தம், சித்திரை 1,2 கால்

இந்த இராசிக்காரருக்குச் சூரியபகவான் இந்த மாதம் விரையத்தானத்தில் லோகமூர்த்தியாகிப் பலம்குறைந்து பவனிவருவது நன்மைதராது. பொதுவாக இவர்களின் தேகநலம் குடும்பநலம் என்பன அடிக்கடி பாதிப்படையும். வருமானமும்

குறைவுறும். இனசனபந்துக்களின் பகைவிரோதங்களும் சத்துருதொல்லைகளும் ஏற்படும். எடுத்த காரியங்களில் தடைதாமதங்கள் ஏற்படும். இராசாங்க தொல்லைகள் கூடஏற்படும். சனீஸ்வரனின் சுபசஞ்சாரபலத்தால் அந்நியர்உதவி அந்நிய தேசப் பொருள்வரவுகள் மேற்கு - தென்மேற்குத் திக்கில் அனுகூலங்களும் சிலருக்கு ஏற்படும். சிலருக்குக் குடும்பத்தில் துக்கசம்பவமும் நிகழலாம்.

குடும்பத்தில் பிணக்குகள் அவ்வப்போது தோன்றிமறையும். கணவன் மனைவி உறவுகள் சீர்கெடும். குடும்பவருமானம் குறையும். செலவுகள் அதிகரிப்பதால் கடன்தொல்லைகளும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் இந்தமாதம் மந்தநிலையடையும். கடன் நிலுவைகள் அறவிடுதலில் சிரமங்கள் ஏற்படும். வங்கி நிதிவசதிகளும் குறைவுறும். வாடிக்கையாளர் வரவும் குன்றும்.

உத்தியோகத்தர்களுக்கு இந்தமாதம் பலப்பல பிரச்சினைகள் ஏற்படும். வேலைப்பழுவும் கூடும். அதிகாரிகளின் உத்தரவுகளைச் செயற்படுத்தமுடியாத தருமசங்கடநிலையும் இவர்களுக்கு ஏற்படலாம்.

விவசாயிகளுக்குச் சனீஸ்வரனின் கருணை இருப்பதால் பயிர்உற்பத்தி வளரும். விவசாயப் பண்ணைகளிலும் கணிசமான அளவு உற்பத்திகூடும் கூலியாட்களின் உதவிகளும் கிடைக்கும்.

தொழிலாளர்களுக்கு வருமானம் கணிசமான அளவு கிடைக்கக்கூடியதாய் வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும். தொழில் ஒப்பந்தவேலைகளிலும் லாபம் கிடைக்கும். நாட்கூலி வேலையாட்களுக்கும் சீவியவசதிகள் கிடைக்கும்.

மாணவர் கல்விஊக்கம் பெரிதும்தடைப்படும். மாணவர்மத்தியில் அக்கறையின்மை- விரக்தி மனப்பான்மை- மறதி முதலானகுணங்கள் தோன்றும். பரீட்சைமுடிவுகளும் ஏமாற்றம் தரும்.

பெண்களுக்குப் பலவழிகளிலும் சோதனையானகாலம். கன்னிபபெண்கள் நயவஞ்சகரால் ஏமாற்றப்பட்டாலும் ஆச்சரியமில்லை. குடும்பத்தில் கணவன் மனைவி பிணக்குகள் அமைதியின்மையை ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: ஆக 18,19ப,27,28
செப் 1,2,6,7ப,10,11,14,15
துரதிஷ்டநாட்கள்: ஆக 20,21,24ப,25,26ப
செப் 4,5மு.ப



# துலாம்

சித்திரை 3, 4,சுவாதி, விசாகம் 1,2,3

துலாம் இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் (லாபத்தில்) 11ல் தாம்பர மூர்த்தியாகிப் பவனிவருவது சமபலன்களையே கொடுக்கும். தேகநலம் சீராகஇருக்கும். வருமானமும் கணிசமான அளவு அதிகரிக்கும். ஆனால் எதிர்பாராத திடீர்ச்செலவினங்கள் கூடஏற்படும். சிலருக்கு புண்ணியயாத்திரைப் பலன்கள் பெரியவர்களின் அருள் ஆசிகள் கிடைக்கும். குடும்பத்தவர்களுக்குள் சுபசந்தோஷ கொண்டாட்டங்கள் நிகழும். ஏழரைச்சனியும் சூரியன் மூர்த்திபலம் குறைவதும் காரியத்தடை தாமதங்கள் அலைச்சல் முதலான பலன்களைக் கொடுக்கும். குருபகவான் திரிகோணத்திலிருந்து திருஷ்டி வலிமை பெறுவதால் எதையும் எப்போதும் வெற்றிகரமாகச் சமாளித்து விடுவார்கள்.

குடும்பத்தின் வருமானம் அதிகரிக்கும். கணவன் மனைவி உறவு சீராகஇருக்கும். புத்திரர் உதவிகளும் கிடைக்கும். வீட்டில் அல்லது நெருங்கிய உறவினர்களுக்குள் மங்கலக் கொண்டாட்டங்களும் நிகழும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரமுன்னேற்றம் தொடரும். முதலீடுகளால் லாபம் கிடைக்கும் புதுமுதலீடுகள் செய்ய ஏற்றகாலம். வங்கி நிதிவசதிகளும் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக்களும் கெடுபிடிகளும் ஒரேசமயத்தில் கிடைக்கும். அதிகாரிகளைத் திருப்திப்படுத்துவதில் சிரமங்களும் ஏற்படும்.

விவசாயிகளுக்குப் பயிரழிவுகள் அடிக்கடி ஏற்படும். உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பால் நட்டமும் ஏற்படும். பண்ணைவிவசாயத்தில் உற்பத்தி அளவு குறைவுறும்.

தொழிலாளர் மத்தியில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். தொழில் பிணக்குகளால் வேலைவாய்ப்புகளும் குறையும். தொழிலாளரின் வருமானம் குறைவதால் கடன் பிரச்சினைகளும் ஏற்படும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். ஆசிரியர்-மாணவர் நல்லுறவு வளரும். கணித விஞ்ஞானத்துறை மாணவருடைய கல்வியில் சிறப்புச் சித்தியும் ஏற்படும். சிலருக்கு வெளிநாட்டுக் கல்வி வசதியும் ஏற்படும்.

பெண்களின் மனநிறைவாக விவாகாதி முயற்சிகள் கைகூடி வரும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரங்களும் சாதகமாக நிறைவு பெறும். குடும்பப் பெண்களுக்கு வீட்டில் சுப சந்தோஷ நிறைவுகளால் மன நிறைவு ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: ஆக. 17ப. 20,21,29,30,31பக,
செப். 4,8,9ப. 12,13.

துரதிஷ்டநாட்கள்: ஆக. 22,23 24காலை.27,28
செப். 5பி.ப. 6,7பகல




விசாகம் 4-ம் கால். அனுஷம், கேட்டை

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 10ல் ரஜஸ மூர்த்தியாகிப் பவனி வருவது நன்மையாகும். கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் இவர்களுக்கு தேக நலம், குடும்பநலம் என்பனவற்றில் முன்னேற்றம் ஏற்படும். பொருள் வருமானமும் முன்னேறும். ஆனால் எதிர்பாராத திடீர்ச் செலவுகளால் கடன் பழுவும் ஏற்படும். ஏழரையுடன் கூடிய குரூர கோசாரத்தில் சனிபகவான் சஞ்சாரம் செய்வதால் அலைச்சல், பொருள் நட்டம், ஏமாற்றம், அந்நிய தேச சஞ்சாரம், அந்நிய நாட்டுப் பிரயாணம் பகை விரோதம் முதலான பலன்களும் நிகழும். சனி தசை, சனிபுத்தி அந்தர காலம் நிகழுபவர்கள் பெரிதும் தாக்கமடைய நேரிடும்.

குடும்பத்தில் சுகவீனங்கள் அடிக்கடி ஏற்படும். கணவன் மனைவி உறவும் திருப்தி தராது. இனசன பந்துக்களுடன் வாக்குவ்ரோதம் பகை விரோதங்களும் ஏற்படும். குடும்பப் பிரிவுகள் கூடச் சிலருக்கு ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு புதன் பலம் பெறுவதால் கடந்த காலங்களிலும் பார்க்க முன்னேற்றம் ஏற்படும். பழைய முதலீடுகளில் லாபம் குறைந்தாலும் நட்டம் ஏற்பட மாட்டாது. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகரின் லாபம் அதிகரிக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுகளும் ஆறுதலற்ற வேலைப் பொறுப்புக்களும் கிடைக்கும். சிலருக்கு கஷ்டபிரதேச இடமாற்றத்துடன் உயர்ச்சியும் கிடைக்கும்.

விவசாயிகளின் உற்பத்திச்செலவுகள் அதிகரிக்கும். இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிர் அழிவும் ஏற்படும். பண்ணைவிவசாயத்தில் உற்பத்தி குன்றும். விளைவுகளும் வீடுவந்துசேராத அவலநிலை ஏற்படும்.

தொழிலிடம் வேலையில்லாப் பிரச்சினைகள் ஏற்படும். வேலைசெய்வோருக்கும் வருமானம்-சம்பளம்- உரியமுறையில் கிடையாது. நாட்கூலியாட்களுக்கு தினசரி வாழ்க்கை கஷ்டம்தரும்.

மாணவர் - ஆசிரியர் மத்தியில் கருத்துவேறுபாடுகள் ஏற்படும். மறதி- அலட்சியம் - விரக்தி முதலான குணங்களால் மாணவரின் கல்வியூக்கம் குறைவுறும்.

பெண்களுக்கு தடைதாமதங்களுடன் எண்ணங்கள் ஓரளவு நிறைவுறும். கன்னிப்பெண்கள் உணர்ச்சிவசப்படுதலால் ஆபத்துக்களில் மாட்டிக் கொள்வர். கணவன்மாரின் ஆதரவும் கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: ஆக 17இ,18,19ப,22,23,24கா
செப் 1,2,3அ.கா,5பி ப,6,7பக

துரதிஷ்டநாட்கள்: ஆக 24ப.25.26ப,29,30,31பக
செப் 7இரவு,8,9பகல்




மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 9ல் சுவர்ணமூர்த்தியாகிப் பலத்துடன் வலம்வருவது நன்மையாகும். இவர்களின் தேகநலம் சீராகஇருக்கும். முன்பு தடைப்பட்டிருந்த காரியங்களில் சித்திஏற்படும். பொருள்வருமானமும் கூடும். இராசாங்க உதவிகள் கிடைக்கும். தூரதேசப்பிரயாணம்- தூரதேச வருமானங்களும் சிலருக்குக்கிடைக்கும். ஏழரைச் சனியும் குருவின் குரூர கோசாரமும் சம்பந்தப்படுதலின் வாகனவிபத்து முதலான அவமிருத்துக்கள், உறவினர், பகை விரோதங்கள் குடும்பத்தில் நெருங்கிய உறவினர்களுக்குள் துக்க சம்பவங்கள் முதலானவையும் கலந்து நிகழும்.

குடும்பத்தவர்களுக்குச் சிக்கல்கள் ஏற்பட்டுக் குடும்பஅமைதி சீர்குலையும். கணவன் மனைவி நல்லுறவும் சீராக அமையாது. குடும்பவருமானத்திலும் செலவுகள் கூடுதலால் கடன் பயமும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளால் லாபம் கிடையாது. வியாபாரமும் மந்தநிலையடையும். வாடிக்கையாளரின் வரவும் வீழ்ச்சியுறும்; வங்கி நிதி இருப்புக்களும் குறையும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் நல் எண்ணங்கள் கிடைக்கும். சிலருக்குப் பதவி உயர்ச்சிகள் கூடக் கிடைக்கும். உடன் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புக் குறைவுறும்.

விவசாயிகளுக்கு இந்த மாதமும் பயிர் விளைவுகள் குறையவே இருக்கும். இயற்கை-செயற்கை ஏதுக்களால் பயிரழிவு இவர்களின் உற்பத்தியை குறைக்கும். பண்ணைகளிலும் விளைவுகள் குறையும்.

தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் குறையும். தொழில் பிணக்குகளும் அதிகரிக்கும், ஒப்பந்தத் தொழில் வேலைகளையும் செய்ய முடியாத நிலை ஏற்படும். வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியுறும்.

மாணவர் கல்வி வளர்ச்சி தடைப்படும். ஆசிரியர்-மாணவர் நல்லுறவு கெடும். மாணவர் மத்தியில் அதிருப்தி நிலவும். பரீட்சை பெறுபேறுகளும் திருப்திதர மாட்டாது.

பெண்களுக்கு காதல் முயற்சிகளில் தோல்விகள்-ஏமாற்றங்கள் தொடரும். விவாக முயற்சிகளும் முடிவில்லாமல் நீளும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாருடன் வேறுபாடுகள் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: ஆக. 17பக 20,21,25
செப். 3,4,8,9பக 12,13

துரதிஷ்டநாட்கள்: ஆக. 26 இரவு, 27,28
செப். 1,2,9இரவு 10,11




உத்தராயம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1,2

மகர இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் அட்டமத்தில் 8ல் லோக மூர்த்தியாகிப் பலக்குறைவுடன் வலம் வருவது நன்மை தராது. ஆனல் சூரியபகவானும் சனிபகவானும் கோசார பலம் பெறுவதால் எதனையும் வெற்றிகரமாகச் சமாளித்துக் கொள்ளுவார்கள். உடல்நலம்-குடும்ப நலம் சீராக இருக்கும். பொருள் வருமானம் திருப்தி தரும். சிலருக்கு அந்நியர் உதவி, அந்நிய தேசப் பொருள் வரவுகள் கூடக் கிடைக்கும். எதிர்பாராத திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்ப வருமானம் திருப்தி தரும். கணவன்-மனைவி நல்லுறவு வளரும். புத்திரர் உறவினர் உதவிகளும் கிடைக்கும். குடும்பத்தில் மங்கள காரியங்களும் நிகழலாம்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவதால் வியாபார முன்னேற்றம் தொடரும். எனினும் புதன் அஸ்தமனமடைவதால் லாபங் குறையவே செய்யும். புது முதலீடுகள் செய்ய ஏற்றகாலம்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வேலைப்பழு தாங்க முடியாமல் அல்லல் உறுவர். சக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் இவர்களுக்குநிறைவுதரும்

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி முன்னேறும். பசளை-மானியம் முதலிய உதவிகள் உரிய காலங்களில் கிடைக்கும். விவசாயப் பண்ணைகளிலும் விளைவுகள் அதிகரிக்கும்.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் கிடைக்கும் தொழில் ஒப்பந்தங்களிலும் லாபம் கிடைக்கும். எண்ணெய் இயந்திரசாதனத் தொழிற் கூலியாட்கள் அதிகலாபம் பெறுவர்.

மாணவர் கல்விமுன்னேற்றம் பெறுவர். கணித-விஞ்ஞான-மருத்துவத்துறை மாணவர்கள் விசேடசித்தி பெறுவர். சிலருக்கு புலமைப் பரிசில்கள் கூடக் கிடைக்கும்.

பெண்களுக்கு கன்னிப் பெண்களுக்கு விவாக முயற்சிகள் கைகூடிவரும் மாதம். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் அரவணைப்பு கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: ஆக. 18,19பகல் 22 23 27,28,
செப். 6,7பகல் 10,11,14,15

துரதிஷ்டநாட்கள்: ஆக. 17பகல் 29,30 31
செப். 4,5மு.ப. 12,13




அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2 3ம் கால்

இவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 7ல் சுவர்ணமூர்த்தியாகி மூர்த்திபலத்துடன் வலம்

வருவது நன்மையாகும். தேகசுகம் குடும்பசுகம் என்பன சீராகஇருக்கும். பொருள் வருமானம் திருப்திதரும். காரியசித்தியும் பெறுவர். இராசாங்கமதிப்பும் உதவிகளும் கிடைக்கும். ஆனல் சென்மவியாழனின் சஞ்சாரமும் நிகழுதலின் மனப்பயம், அலேச்சல், காரியத்தடை, அவப்பெயர் பதவிநீக்கம், சிறைப்பயம் முதலான கஷ்டபலன்களும் கலந்து நிகழும். எவ்வாருயினும் சூரியபகவானின் மூர்த்திபலத்தால் எதனையும் சமாளித்துக் கொள்ளுவார்கள்.

குடும்பத்தில் கணவன் மனைவி உறவு பாதிக்கப்படும். குடும்பவருமானமும் குறைவுறும். குடும்பப்பெரியவர்களுடன் பகைவிரோதங்களும் ஏற்படும். புத்திரர் துன்பமும் உண்டாகும்.

வர்த்தகர்களுக்கு புதன் அஸ்தமனமாகிப் பலவீனப்படுவதால் முதலீடுகளில் வருமானமும் குறைவுறும். பழையநிலுவைகளை அறவிடமுடியாதநிலை ஏற்படலாம். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளால் பாராட்டுக்களும் பதவிச்சிறப்புக்களும் கிடைக்கும். ஆனல் வேலைப்பொறுப்புக்களும் அதிகரிக்கும். உத்தியோகத்தரின் நல்லுறவு குறைவுபடும்.

விவசாயிகளுக்கு பயிர்உற்பத்தி குன்றும். இயற்கை செயற்கைப் பாதிப்புக்களால் பயிர்ச்சேதம் ஏற்படும். பண்ணைவிவசாயம் லாபம் குறைவுபடும்.


தொழிலாளருக்குக் கணிசமானஅளவு வேலைகள் கிடைக்கும். ஆனல் தொழிலாளர் பிணக்குகளும், வேலைநிறுத்தம முதலான போராட்டங்களும் இவர்களின் வருமானத்தைக் குறைக்கும்.

மாணவர் கல்விமுன்னேற்றம் தடைப்படும். ஆசிரியர்- கல்வி அதிகாரிகளுடன் மாணவர்கருத்து மோதல்கள் ஏற்படும். கல்வித்தேர்ச்சிகளும் திருப்திதராது

பெண்களுக்கு எல்லாம் தடைதாமதங்களுடன் கூடி அலேச்சல் ஏமாற்றம் தருமமாதம். விவாக முயற்சிகள் தாமதப்படும். குடும்பப்பெண்களுக்குக் கணவன்மாரின் கண்டிப்பு அதிகரிக்கும்.

அதிஷ்டநாட்கள்: ஆக 20.21.25 29 30
செப் 8,9 .12 13

துரதிஷ்டநாட்கள்: ஆக 17இ.18.19 .31இ
செப்: 1 2,3 6.7ப 14,15



# மீனம்

பூரட்டாதி 4ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

இவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 6ல் தாம்பரமூர்த்தியாகி வலம்வருவது நன்மைகலந்த தியபலன்களே நிகழும். பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராகஇருக்கும். பொருள்வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். எந்தக்காரியமும் தடைதாமதம் அலேச்சல்மூலமே பலன்பெற வேண்டிஇருக்கும். சிலருக்கு அந்நியதேச சஞ்சாரமும் ஏற்படும். குடும்பத்தில் சுப சந்தோஷச் சடங்குகள் பெரும்பாலும் நிகழஇடமில்லை.

குடும்பத்தில் அமைதிகுறைவுறும். குடும்பசுகவீனம் கவலைதரும். பெரியவர்கள் இனபந்துக்களுடன் பகைவிரோதங்கள் உண்டாகும். புத்திரர் உதவிகள் கிடையாது. குடும்பச்செலவும் ஏறும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளினல் லாபம் குறைந்தாலும் நட்டம் ஏற்படாது. வங்கி நிதி இருப்புக்கள் குறைவுறும். அநாவசியச்செலவுகள் அடிக்கடி ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகள் துன்பம் கொடுப்பார்கள். வேலைப்பொறுப்புக்களைச் சமாளிக்கமுடியாத நிலைகூட ஏற்படும். சிலர் பதவியைக்கூடத் துறந்தாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் திருப்திதரும். ஆனல் பயிரழிவும் கூலியாட்கள் பிரச்சினையும் இருக்கவே செய்யும். மானியம் - பசளை- மருந்து முதலியன சமயத்தில் கிடைக்காது.

தொழிலாளர் பிணக்குகளால் வேலைவாய்ப்புகள் குறைவுறும். தினக்கூலிவேலைசெய்வோருக்கு நாளாந்தசீவியம் கஷ்டபதரும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் குறைவுறும்.

மாணவர் கல்வி வளர்ச்சிகாணும். மருத்துவம் பொறியியல்துறை மாணவருக்குச் சிறப்பான முன்னேற்றம் கிட்டும். வெளிநாடுகளிலும் கல்விவாய்ப்புக்களைத்தொடர வசதிகள் கிடைக்கும்.

பெண்களுக்கு எச்சரிக்கையானகாலம். கன்னிப்பெண்களுக்குக் காதல்விவகாரங்களில் தோல்விகள்கூட ஏற்படலாம். குடும்பப்பெண்களுக்கு உடல் உளப்பாதிப்புக்கள் அடிக்கடி ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: ஆக 17இ,18,19ப,22,23,27,28
செப் 1,2 10,11,14,15

துரதிஷ்டநாட்கள்: ஆக 19இ.20,21
செப் 4,5மு.ப,7இ:8,9ப

# எண் சோதிடமும் அதன் உண்மைகளும்

(முன் தொடர்ச்சி)

புராதன கிபுறுக்களிடமிருந்து கிரேக்கர்கள் எழுத்துக்களின் தன்மையையும் சக்தியையும் சிறிய மாற்றத்துடன் பின்பற்றினர்.

உதாரணத்திற்கு கிரேக்கர் இரண்டாவது எழுத்தை 'பீற்ரு' (Beta) என்றுர்கள். இதை கிபுறுக்கள் 'பெத்' (Beth) என்றுர்கள். இதே எழுத்தை ஆங்கிலத்தில் 'B' என்பர். இதேபோல் ஒலியின் காரணத்தால், இரு இனத்தவரின் எழுத்துக்கள் பலவற்றின், தொடர்புகள் காணப் படுவதால் ஒலிக்கேற்ற பெறுமானம் இவர்கள் முறைகளில் முக்கியத்துவம் பெறுகிறது. ஒலிக் கேற்ற பெறுமானங்களையும் கிபுறு எழுத்துக்களின் பெறுமானங்களையும் ஆராயும் போது ஆங்கில எழுத்துக்களுக்கு பெறுமானமாக அமையக் கூடிய ஒரு பொதுவான முறை ஏற்படுகிறது.

இப்போது உண்மையான கிபுறு எழுத்துக்களையும் அவைகளின் ஒலி அமைப்புக்களையும் அவதானிப்போம்.

| கிபுறு எழுத்து Hebrew Letter | எண் Number | ஒலிகள் Sounds |
|---|---|---|
| Alefh | 1 | A, Ah, Aa |
| Beth | 2 | B |
| Gimel | 3 | G |
| Daleth | 4 | D |
| He | 5 | E, Eh, Ay |
| Vau | 6 | V, U W, Co |
| Zain | 7 | Z |
| Cheth | 8 | H, Ch |
| Teth | 9 | Th |
| Jod | 10 | I, Y, J, Ee |
| Caph | 11 | C, K, Ch |
| Lamed | 12 | L |
| Mem | 13 | M |
| Nun | 14 | N |
| Samek | 15 | X |
| Ayin | 16 | O, Oh |
| Pe | 17 | F, P, Ph |
| Tzaiddi | 18 | Sh, Ts, Tz |
| Queph | 19 | Q |
| Resh | 20 | R |
| Shin | 21 | S |
| Tau | 22 | T |

இங்கு கிபுறு எழுத்துக்கள் ஒன்று தொடக்கம் 22 வரையும் பெறுமானம் கொண்டவையாக இருப்பதால் பெறுமான எண்களை அடிப்படை எண்களுக்கு மாற்றியமைக்கும் போது பின்வருமாறு அமையும்.

1 — A, I, Y, Q, J
2 — B C, K R
3 — G, L, S
4 — D, M, T
5 — E, N
6 — U, V, W, X
7 — O, Z
8 — F, P, H
9 — Th, Tz

---

''பவானி'' — பருத்தித்துறை.

---

22 கிபுறு எழுத்துக்களின் பெறுமானங்களை 26 ஆங்கில எழுத்துக்களுக்கு பெறுமானமாக அமைக்கும் போது பின்வருமாறு இருக்கும்:

1 Aleph / Jod — A, I, Y
2 Beta / Caph / Resh — B, K, C, R
3 Gimel / Shin / Lamed — G, J, S, L
4 Daleth / Mem / Tau — D, M, T
5 He / Nun — E, N
6 Vau / Samek — U, V, W, X, (Q-½ பெறுமானம்)
7 Zain / Ayin — Z, O
8 Pe / Cheth — F, P, H

இவ்வழியில் பலவருஷ ஆராய்ச்சிக்குப் பின் பல சோதனைகளுக்கும் உட்படுத்திய பண்பு செயல் முறைகளுக்கு நாங்கள் கையாளும் முறை மிகவும் நன்றாயிருந்தது.

| | கீபுறு | | பைதாகரஸ் | | ஒலிமுறை |
|---|---|---|---|---|---|
| 1 | A, I, Y | — | A | — | A; Y, I |
| 2 | B, C, K, R | — | B | — | B, K, R |
| 3 | G, L, S | — | C | — | J, G, L |
| 4 | D, M, T | — | D | — | D, T, M |
| 5 | E, N | — | E | — | N |
| 6 | U, V, W | — | ... | — | U, V, W, S |
| 7 | O, Z | — | ... | — | Z, O (Initial) |
| 8 | F, P, H | — | H | — | P, F, H |

மேலே கொடுக்கப்பட்ட விபரத்தில் ஆங்கில எழுத்துக்கள் X, Q முதலியனவை இடம் பெற வில்லை.

மேற்கூறிய மூன்று முறைகளில் கூறிய பெறு மானங்களை ஒன்று தொகுக்கும் போது பின்வரும் முடிவு ஏற்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1 | — | A, I, Y |
| 2 | — | B C, K, R |
| 3 | — | C, G, J, L, S |
| 4 | — | D, M, T |
| 5 | — | E, N |
| 6 | — | V, U, W, S |
| 7 | — | O, Z (Initial) |
| 8 | — | F, P, H |

எண்கள் 9,18 முதலியவற்றிற்கு கீபுறு முறையில் (Teth) Th, (Tzaddi) Ts, Tz, Sh கொடுக்கப் பட்ட போதிலும் அவைகள் T, S (Soft) ஆல் பிரதிபலிக்கலாம். ஒலிக்கேற்ற பெறுமான முறையில் Th, Tz முதலியவைகளுக்கு எண் 9 கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேலே காட்டப்பட்ட அட்டவணையில் இரண்டு விதமான உச்சரிப்பின் காரணத்தால் C, S ஆகிய எழுத்துக்களுக்கு இரண்டு விதமான எண் பெறுமானங்கள் காணப்படுகின்றன. இன்னொரு விடயம் இங்கு கவனிக்கத்தக்கது. கீபுறு முறை, பைதாகரஸ் முறை ஒலிக்கேற்ற முறை யாவிலும் உள்ள பெறுமானங்களை ஆங்கில எழுத்திற்கு அளிக்கும் போது எல்லா எழுத்துக் களின் பெறுமானங்களும் எண் 1 தொடக்கம் 8 வரைக்குள் அமைவதால் எண் 9 தோன்றவில்லை.

இங்கு எழுத்துக்களுக்கு பெறுமான எண்களைத் தீர்மானிக்கும் போது மற்றும் ஆசிரியர்களின் கருத்துக்களை கண்மூடித்தனமாக ஏற்கவும் இல்லை! மறுக்கவும் இல்லை!!

இன்று உலகில் அதிகமான மக்களால் எங்கும் பேசப்படும் ஆங்கில மொழியின் எழுத்துக்களுக்கு கீபுறு எழுத்துக்களை வைத்துக் கொண்டு சரியான எண் பெறுமானங்களைக் கண்டு கொள்வது தான் மாணவர்களின் சரியான முறையாகும்.

இதைத் தவிர்ந்த ஏனைய முறைகள் யாவும் ஆங்கில எழுத்துக்களுக்கு சரியான பெறுமான எண்களைக் கண்டு கொள்வதற்கு எந்த விதத்திலும் உகந்ததாகத் தெரியவில்லை. இதனால் எங்கள் ஆராய்ச்சியின் முடிவு செயல்முறை எண் சோதிடத்திற்கு (Practical Numerology) நல்ல பலனைக் கொடுத்திருப்பதாக முழு நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு அந்தத் தும்பிக் கையான் அருளே காரணமாகும்.

இம்முறையை இனிமேல் எண் சோதிடத்தில் ஈடுபாடுள்ளவர்கள் பரீட்சித்துப் பல சோதனைகளுக்கு உட்படுத்தி அதன் உண்மையை உணர்ந்து கொள்ளலாம்.

மாணவர்களும் ஆசிரியர்களும் இதுகால வரையும் கையாண்ட முறைகளில் நன்கு பிரபலமடைந்த முறையில் சில ஆங்கில எழுத்துக்களுக்குக் கொடுக்கப்பட்ட பெறுமான எண்களுக்கும் எமது முறையில் கொடுக்கப்பட்ட பெறுமான எண்களுக்கும் வேறுபாடுகள் சில இருப்பதை அடுத்த இதழில் ஆராய்வோம்.

முக்கிய குறிப்பு:

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

ஆ-ர்

# பஞ்சாங்கங்களும் இயற்கை நிகழ்வுகளும்

— சா. சக்திதாசன், தெல்லிப்பளை. —

இலங்கையில் இம்முறையும் வழக்கம்போல் வெளிவந்த பஞ்சாங்கங்கள் இரண்டும் பல்வேறு வகைகளில் முரண்பட்ட கணிப்புக்களை அளித்து மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியபோதிலும் சோதிட சாஸ்திர வல்லுனர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்வோர் இத்தகைய குழப்பத்தை நீக்கிச் சரியான கணிப்பு எது என்பதைத் தெளிவாக்கிப் பிழையான பஞ்சாங்கத்தைப் புறக்கணிக்கும்படி மக்களைக் கேட்டுக்கொள்ளாமல் வாளாவிருப்பது வேதனைக்குரியது.

ஒரு பஞ்சாங்கம் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதாலோ, அதைப்பின் பற்றுபவர்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள் என்பதாலோ, நீண்ட காலமாக அது கணிக்கப்பட்டு வருகிறது என்பதாலோ அப்பஞ்சாங்கத்திற்கு உண்மையான மதிப்பு வந்துவிடாது. அதேபோல அண்மைக்காலத்திலேயே கணிக்கத் தொடங்கப் பெற்றது என்பதால் சரியான கணிப்புக்களை வழங்கும் பஞ்சாங்கம் மதிப்பை இழந்துவிடாது. எனவே பஞ்சாங்கம் ஒன்று சரியானதா? எனத் திட்டவட்டமாக அறியவேண்டிய தேவை ஏற்படுகிறது. அண்டவெளியில் நகரும் சூரிய சந்திர நட்சத்திரங்களின் சலனங்களையும் அவற்றோடு தொடர்புபட்ட பூமியின் சலனத்தையும் கருத்திற்கொண்டே பஞ்சாங்கங்கள் கணிக்கப்படுகின்றன. இக்கணிப்புக்கள் கொடுக்கும் தகவல்கள் இயற்கை நிகழ்ச்சிகளான பூரணை, அமாவாசை, கிரகணங்கள் என்பவற்றையும் சரியாகக் காட்டல் வேண்டும். இவற்றுள்ளும் கிரகணங்கள் பற்றி முன் கூட்டியே மிகத்திருத்தமாக எந்தப் பஞ்சாங்கம் கூறுகிறதோ அதுவே ஏற்றுக்கொள்ளத்தக்கது என அறுதியிட்டுக் கூறலாம்.

அண்மையில் நடைபெற்ற பூரண சந்திர கிரகணத்தைக் கவனமாக அவதானித்தவர்கள் திருக்கணித பஞ்சாங்கமே மிகச்சரியான கணிப்பைத் தந்திருந்தது என்பதை அறிவார்கள். வாக்கிய பஞ்சாங்கம் 1 தொடக்கம் 7 நிமிடங்கள் வரை வித்தியாசப்படும்படியான கணிப்பை அளித்திருந்தது. இயற்கை நிகழ்வொன்றைப் பொறுத்தவரை இவ்வித்தியாசம் பாரதூரமானதாகும். சென்ற பல வருடங்களாகத் திருக்கணித பஞ்சாங்கம் இயற்கை நிகழ்வுகளை இதேபோன்று சரியாகக் கணித்துத்தந்துள்ளமையால் திருக்கணித பஞ்சாங்கமே அறிவியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்கது; மக்கள் யாவரும் சரியான ஒன்றை ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டாது பிழையான கணிப்புக்களினால் குழப்பம் ஏற்படுத்தும் வாக்கிய பஞ்சாங்கத்தைப் புறக்கணிக்க வேண்டியது கடமையாகும்.

## விநாயகர் ★ துணை ★

வரம் கேட்டு வணங்கிநின்றேன் வல்வினையைப் போக்கிடுவாய்
அருள் தந்து ஆட்கொள்வாய் ஆனைமுக ஆண்டவனே
அரசமர நிழலினிலே அமர்ந்திருக்கும் நாயகனே நீ
சரவணனைச் சரணடைந்து சக்தி பெறக் காரணனே.

பக்தியுடன் வந்தவர்க்குப் பகுத்தறிவுப் பாதையிலே
சித்தியுடன் வாழ்ந்திட நீ சிறந்த வழி காட்டிடுவாய்
சத்தியத்தின் நாயகனே சக்தியுமை பாலகனே
பக்திநெறி காட்டிடுவாய் பவவினைகள் தீர்த்தருள்வாய்.

சஞ்சலங்கள் போக்கிடுவாய் சற்குருவாய் ஆனைமுகன்
தஞ்சமென்பார்க் கருள்வதற்கே தரணியிலே ஆனைமுகன்
அஞ்சாமல் அடிபணிவேன் ஐந்துகரத் தரசனிடம்
பிந்தாமல் காத்தருள்வாய் பிணிதீர்க்கும் பேரமுதே.

வி. கே. எம். தர்மலிங்கம்

உ

18-8-86-ல்

# ஏற்படும் ராகு - கேது பெயர்ச்சி


ராகு


கேது

சாயாக்கிரகங்கள் என அழைக்கப்படும் இராகு, கேதுக்கள் நிகழும் க்ஷய வருடம் ஆவணி மாதம் 2-ந்திகதி (18-8-86) திங்கட்கிழமை மாலை 5-45 மணியளவில் ராகு மீனத்திலும், கேது கன்னியிலுமாக பின்னோக்கிப் பிரவேசிக்கின்றன. இராகு கேது மாற்றத்தால் பொதுவாக உலகநாடுகளில் கொந்தளிப்பான நிலைமைகளே தொடரும். போர்ப்பீதி அதிகரிக்கும். இலங்கையின் லக்கினமான கும்பராசிக்கு ராகு கேதுக்கள் லோகமூர்த்தியாக முறையே 2-ம், 8-ம் ராசியில் சஞ்சாரம் செய்வதால் துர்ப்பலன்களே அதிகம் நிகழும். அரசினருக்குள் கருத்துவேறுபாடுகள் தோன்றும். பேச்சுவார்த்தைகளில் தீர்வுகாண்பதில் சிக்கல்கள் தொடரும். நாட்டின் தலைவருக்கும் இராகு கேது மாற்றம் நன்மையளிப்பதாகத் தெரியவில்லை. அரசியல் தலைவர்களின் பதவிக்கும் ஆபத்து நேரிடலாம்.

இனி தனிப்பட்டவர்கட்கு ராகு, கேது மாற்றம் எப்படியான பலனைக்கொடுக்கும் என்பதை ஆராய்வோம்.

மேடராசியினருக்கு இராகு, கேதுக்கள் தாம்ர மூர்த்தியாக 12-ம், 6-ம் இடங்களில் சஞ்சரிப்பார்கள். இவர்கள் நற்பலன்களை எதிர்பார்க்க முடியாது. தேகசுகம் பாதிக்கப்படுதல், பணவருவாய் குன்றுதல், பதவியுயர்வுகள் தடைப்படுதல் மனநிலை மாற்றமடைதல் போன்ற பலன்கள் நிகழலாகும். மூர்த்திபலமும் குறைந்திருப்பதால் முன்னேற்றங்கள் யாவும் தடைப்பட்டவண்ணம் இருக்கும். வெளிநாட்டுப்பிரயாண வாய்ப்புகள் கைகூடிவரும். மாணவர்களுக்கு மத்திமபலனே உண்டாகும். தொழிற்துறை முதலியனவற்றில் அலைச்சல் அதிகமாகும்.

இடபராசியிற் பிறந்தவர்கட்கு இச்சாயாக்கிரகங்கள் ரஜதமூர்த்தியாக 11-ம், 5-ம் ராசியிற் பிரவேசம் செய்வது நன்மையானதாகும். இதனால் பொருள்வரவு, குடும்பசுகம், தொழில்மேன்மை, மனச்சந்தோஷம், பணவருவாய் போன்ற நற்பலன்கள் அதிகரிக்கும். எதிர்ப்புக்களைச் சமாளித்து முன்னேறக் கூடியதாக இருக்கும். மணமாகாதோருக்கு மணவாழ்க்கை சிறப்படையும். மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படலாகும். கொடுக்கல், வாங்கல் விடயங்கள் திருப்தியளிக்கும்.

மிதுனராசியில் ஜனனமானவர்கட்கு ராகு, கேதுக்கள் லோகமூர்த்தியாக 10-ம் 4-ம் ராசியிற் பவனிவருவார்கள். இவர்கட்கு பொதுவாக கஷ்டபலன்களே நிகழவுள்ளன. பந்தபாசங்களில் விஷமத்தனங்களும், மறைமுக எதிர்ப்புக்களும் தோன்றும். தேகசுகமும் மனநிம்மதியும் குறைந்து காணப்படும். நிதிநிலைமைகள் சிக்கலாக அமையும். திருமணமாகாதவர்கட்கு மணவாழ்க்கை கிட்டாது. கணவன் மனைவியரிடையே கருத்துவேறுபாடுகள் தோன்றலாம். தொழில்துறைகளில் பிரயாசை அதிகமாகும்.

கடகராசியில் உதித்தவர்களுக்கு இராகு, கேதுக்கள் தாம்ரமூர்த்தியாகி 9-ம் 3-ம் ராசிகளில் பிரவேசம் செய்கின்றன. இனபந்துகளுக்குள் மன

வேற்றுமை, தொழில்துறைகளில் சிக்கல்கள் கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களில் ஏமாற்றம், காதல் விடயங்களில் தோல்வி போன்ற துர்ப்பலன்களே, நிகழ இடமுண்டு. கொடுக்கல் வாங்கல் விடயங்களில் பகைமை வளரும். வரவிலும் பார்க்கச் செலவுகள் அதிகரிக்கும். உற்றார் உறவினரிடையே கசப்பு மனப்பான்மை வளரும்.

சிங்கராசியில் ஜனனமானோருக்கு ராகு கேதுக்கள் சுவர்ணமூர்த்தியாக 8 2-ம் ராசிகளில் சஞ்சரிப்பது மிக நன்றாகும். பல எதிர்ப்புகளின் மத்தியில் முன்னேற்றம் சிறக்கும். தொழிற்சிறப்பு பொருளாதார வசதி, எண்ணியவை எண்ணியாங்கு கைகூடுதல் போன்ற நற்பலன்கள் உண்டாகும். தேகசுகம், குடும்பசுகம் என்பன சிறப்புறும். மாணவர்களுக்கு கல்வித்துறையில் எதிர்பாராத முன்னேற்றம் கிட்டலாம்.

கன்னிராசிக் காரருக்கு ராகு கேதுக்கள் ரஜதமூர்த்தியாக 1, 7ஆம் ராசிகளில் சஞ்சாரம் செய்கின்றன. இவர்களுக்கு நினைத்த கருமங்கள் அனுகூலமாவதில் தாமதமுண்டாகும். தேகசுகம் பாதிக்கப்படாவிடினும் சற்றுத் தளர்வேற்படக் கூடும். இனசனங்களிடையே மாற்றம் உண்டாகலாம். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் திருப்தியிருக்காது. குடும்பவாழ்க்கையில் பிரச்சினைகள் அதிகரிக்கலாகும்.

துலாராசியில் பிறந்தவர்கட்கு ராகு கேதுக்கள் லோகமூர்த்தியாக 6-ம் 12-ம் ராசிகளில் பவனி வருவார்கள். மூர்த்திபலம் குன்றியிருப்பதனால் பொதுவாகக் கஷ்டபலன்களே அதிகம் நிகழும்; எண்ணியவை எண்ணியாங்கு நடைபெறாது. இனசனம், பெற்றோர் முதலியோருடன் மனக்கசப்பான சம்பவங்கள் நிகழக்கூடும். தொழிற்துறைகளில் மாற்றம் ஏற்படலாகும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படும். எவ்விடயத்திலும் அவதானம் வேண்டும்.

விருச்சிகராசியினர்க்கு ராகு, கேதுக்கள் தாம்ரமூர்த்தியாக 5-ம் 11-ம் ராசிகளில் பிரவேசிக்கின்றனர். இவர்கட்கு பொதுவாக நன்மை, தீமை கலந்தபலன்களே காணப்படும். ஏழரைச் சனியின் பாதிப்பும் நிகழ்ந்தவண்ணம் இருக்கும். வருவாய் முதலியன அதிகரிக்கும். கணவன்-மனைவி உறவு திருப்தியளிக்காது. மனநிம்மதி சற்று முன்னேற்றமளிக்கும். வசதியான இடமாற்றங்கள் கிட்டாது போகலாம். அலைச்சல், பிரயாசை அதிகமாகும். புத்திரரால் நற்பலன்கள் கிடைக்க மாட்டாது. மாணவர்கட்கு கூடியஊக்கம் தேவை.

தனுராசியில் ஜனித்தவர்கட்கு சாயாக் கிரகங்கள் ரஜதமூர்த்தியாகி 4-ம்,10-ம் ராசிகளில் சஞ்சாரம் செய்ய விருப்பது நன்மையானதாகும். தொழில் முன்னேற்றம் ஏற்படலாகும். அரச தொழிலாளர் மேலதிகாரிகளால் பாராட்டு தல்களுக்கு ஆளாவர். சக உத்தியோகத்தரால் விரும்பப்படுவர். நிதிநிலைமைகள் திருப்தியளிக்கும் கணவன் - மனைவி உறவு திருப்தியளிக்கும். மணமாகாதவர்கட்கு மணவினை கைகூடும்.

மகரராசியினருக்கு ராகு, கேதுக்கள் சுவர்ணமூர்த்தியாக 3-ம், 9-ம் ராசிகளில் சஞ்சரிப்பது மிகவும் சிறப்பாகும். வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படும். தொழில் முன்னேற்றம், பதவியுயர்வு, கருமம் கைகூடுதல், மேலதிகாரிகளின் பாராட்டு போன்ற நற்பலன்கள் உண்டாகும். கணவன் - மனைவி உறவு வலுக்கும். தொழிலாளர்களிடையே பரஸ்பரம் ஒத்துழைப்புக் காணப்படும், மாணவர்களுக்கு கல்வியில் மகிழ்ச்சியளிக்கும் செய்திகள் கிட்டலாம். இவ்விராசியினருக்கு குரு, சனி முதலிய கிரகங்களின் சஞ்சாரங்களும் நற்பலனை மேலும் கொடுக்கும்.

கும்பராசியினருக்கு ராகு, கேதுக்கள் லோகமூர்த்தியாக 2-ம், 8-ம் ராசிகளில் பவனிவருவது கஷ்டபலன்களையே கொடுக்கவுள்ளது. தொழில் துறையிலுள்ளோர் அதிகாரிகளுடன் சண்டையிட்டுக் கொண்டு மனவிரக்தியடைவர். பதவியுயர்வும், கிட்டாது. குடும்பநிலை திருப்தியளிக்காது. தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படும். உறவினருக்குள் அபிப்பிராயபேதம் ஏற்படும். விவாகமாகாதவர்கட்கு மணவாழ்க்கை தாமதப்படும். மாணவர்களுக்கு கல்வித்துறைகளில் திருப்தியான பலன் கிட்டாது.

மீனராசியில் உதயமானவர்களுக்கு ராகு, கேதுக்கள் சுவர்ணமூர்த்தியாக 1-ம்,7-ம் ராசிகளில் சஞ்சரிப்பது சுமாராக இருக்கும். தொழில்துறை முதலியவற்றில் முன்னேற்றம் உண்டாகும். குடும்ப வாழ்க்கை ஏனோ தானோ என்ற நிலையிலிருக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே விரக்தி மனப்பான்மை மேலோங்கும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். மணமாகாதவர்கட்கு மணவாழ்க்கை கிட்டுவதில் தாமதம் காட்டும். மாணவர்கட்கு கல்வித்துறை நன்மைபயக்கும்.

# விதியை மாற்ற முடியுமா?

(சென்ற இதழ் தொடர்)

சோதிடம் இவ்வகையில் நமக்கு ஓரளவு ஆறுதலைத்தர உதவும்போதும்; சோதிடபலனை அறிவதால் சிறுதீங்கும் உண்டு என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. சோதிடபலனை நற்திறனுடைய சோதிடர் வாயிலாக அறியும்போது சிலவேளைகளில் சோதிடருக்குத் தயக்கமும், ஜாதகருக்குத் திருப்தியின்மையும் ஏற்படுகிறது. இதனால் சில உண்மைகளைச் சோதிடர் கூறாநிலையும்; விபரீதம் ஏதும் நடப்பின் சோதிடர் அதனைக்கூறவில்லையே என சோதிடர்மீது திறமையின்மை என்னும் குற்றச்சாட்டு சாதகருக்கு ஏற்படுவதும், தவிர்க்கமுடியாததாகிறது. ஒரு நோயாளிக்கு நோயின் தன்மை, தாக்கம் பற்றிய உண்மைநிலையை வைத்தியர் நேரடியாகக் கூறாமைபோல சில கஷ்டபலன்கள் ஏற்படும் கட்டத்தில் சோதிடர் தாமாகவே அதனைச் சாதகருக்குக் கூறவிரும்பார்; ஜாதகர் வலிந்து கேட்பாராயின் மறைமுகமாக ஜாதகர் ஏக்கங்கொள்ளாவகையில் அவ்வுண்மை நிலையைக் குறைவாகக் கூறுவர். யோகபலன்போன்ற நற்பலன் உரைக்கும்போது சிறிது உற்சாகமாக அதிகம்புகழாய்க் கூறிடுவார். இதன்காரணம் உளவியல் ரீதியில் மனித இனத்தின் பலவீனங்களை சோதிடரும் அறிந்திருப்பதேயாகும். ஏனெனில் மிக வசதியுடனும் நல்நிலையிலும் இருக்கும் ஒருவன் தனது சோதிடபலனை அறிய ஆவலடைவதில்லை. கஷ்டநிலையில் உள்ளபோதே இவ்வாராய்வுக்கு எண்ணம் தூண்டப்படும். சாதாரண மனிதன் எவனும் எதிர்காலம் சுபீட்சமுடையதாக நன்கு அமையும் எனவே கனவுகாண்கிறான்; விரும்புகிறான். இன்றிருப்பதைவிட நாளை உயரவேண்டுமென விரும்பாதவன் எவருமில்லை. இதனால் கஷ்டபலன்கள் மறைக்கப்படுவது தவிர்க்கமுடியாததாகிறது. அதனைத் துணிந்து கூறினும் ஜாதகர் மனம் அமைதியடையாது. தனக்கு அப்படி ஏற்படாது எனவும் சோதிடருக்கு நல்லமுறையில் பலனைக் கூறத்தெரியவில்லை என்னும் மனக்குறையும் ஜாதகர் மனதில் தோன்றி வெறுப்படைந்து காணப்படுவர். மரணம் போன்ற சில குறிப்புரைகளை சோதிடர் துணிந்து கூறினால் ஜாதகர் மரணத்திற்கு அக்கூற்றே கூற்றுவனாய் அமைந்து விடுவதுமுண்டு. இவைபோன்ற குறைபாடுகளும் சோதிடபலனை அறியும்போது உண்டாகிறது. பளிங்குக்கண்ணாடி போன்று நிகழ்வதை அப்படியே கூறும் திறனுடைய சோதிடர்களும், உண்மையைக் கூறமுடியா நிலைக்கு ஆளாகிறார்கள். இது சோதிடரின் தவறல்ல. நமது பலவீனம் இதற்குக் காரணமாகிறது.

தெய்வ வழிபாட்டினால் நமது துன்பங்களைக் குறைக்கமுடியுமா? என்பதைச் சிறிது கவனிப்போம் "நாளென்செயும் வினை தான் என்செயும்...? என அருணகிரிநாதரும், "ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே" என சம்பந்தப்பெருமானும் "சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை" என ஔவைப்பாட்டியும் உரைத்தமையை நாம் உற்றுநோக்குகையில், இறைவனை வழிபடுவோர்க்கு நவக்கிரகங்கள் நன்மையே செய்கின்றன என்னும் முடிவுக்கு வருகின்றோம். நம்மைநாம் நம்புவதிலும் இறைவனை நம்புதல் உகந்தது என்பதனை "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்னும்

ஆ. வினாயகமூர்த்தி — புலோலி.

வாக்கினால் உணர்கிறோம். இதனால் கிரக வழிபாடு தெய்வ ஆராதனை இவைகளால் நமது கஷ்டங்களைக் குறைத்துக் கொள்ளலாம் என்று ஏற்படுகிறது. சோதிடத்தால் வரும் நன்மையில் இதுவுமொன்று. எவ்வாறெனில் சோதிடபலனை ஆய்ந்தறியும்போது தோஷத்தைத் தரும் கிரகத்தையும், அக்கிரகத்திற்குப் பிரீதியான சாந்திமுறையையும், அக்கிரகத்தின் அதிபதியானதெய்வத்தை உபாசனை செய்யும்படியும் சோதிடர் குறிப்பிடுவர், அப்போது சாதகருக்கு சாந்தி உண்டாகிறது. கிரக தாக்கம் குறைவுபடுகிறது, காலபலன் நன்றாக இல்லை என ஜாதகர் எச்சரிக்கப்படும் போது சிறிது அவதானமாக இருக்க முடிகிறது. காலநிலை சாதகமா? பாதகமா? என்பதனை உணர்வதற்கு சோதிடம் அவசியமாகிறது.

எமக்கு நவகோள்கள் தற்போது அனுகூலமாக உள்ளனரா? கேட்டைத்தரும் நிலையிலுள்ளனவா? என்பதைஅறிய; அனுகூலமற்றிருப்பின் அவதானமாக இருக்க; கேட்டைத்தரும் காலத்தை

அறிய; அக்காலத்திற்கு அதற்கேற்ப 'சாந்தி, வழிபாடு அபிஷேக, ஆராதனைசெய்ய' சோதிட பலன் அறியவேண்டியது அவசியமாகிறது. எல்லாம் விதிப்படியே நிகழ்கிறது என வாழாவிருக்காது எமது விதி எவ்வாறு உள்ளது என்பதைச் சோதிடமூலம் அறியமுற்பட்டு, அதற்கேற்ப எம்மைத் தயார்செய்து கொள்வோமாயின் ''நாளென் செயும் வினை தான் என்செயும்'' எனக்கூறும் பக்குவநிலைக்கு நாம் வரமுடியும்; தெய்வ கடாட்சத்தைப் பெறமுடியும். ஆனுல் அங்கு எமக்கு விதி மாற்றம் செய்யப்படவில்லை. நமக்கு அவ்வாறுன பக்குவநிலையைத்தர விதி எமக்குச் சார்பாயிருந்துள்ளது. அப்போது நாம் கடைத்தேறுவேன் நல்நிலையடைவேன் என்று இருந்துள்ளது. அதனை உணராமல் நான்விதியை வென்றுவிட்டேன் என்று பெருமிதப்பட்டுக் கொள்கிறேன். அதே சமயம் சோதிடம் பாராது காலபலனை உணராது ''எல்லாம் நீயே ஆண்டவா என்னுளிருக்குமிறைவா என இறைவனேடு ஐக்கியப்பட்ட ஆன்மா நமக்கு சோதிடம் எதற்கு? என்று கேட்டால்...... யாவும் கடந்தநிலையில் பந்தபாசங்களை மறந்து தவயோக நிலையில் சோதிடம் அவசியமா? என வினவினுல் அவசியமில்லை என்றே கூறவேண்டும். ஆனுல் அந்த நிலைக்கு வந்தபின் இந்தக் கேள்வியும் அவசியமில்லையல்லவா? எனவே உலகியல் இன்பத்தில் மூழ்கித்திளைக்க விரும்பும் எம்மவர்க்கு சோதிடம் அவசியமே எனக்கூறுவதோடு விதி இவையாவற்றிற்கும் அப்பாற்பட்டதெனவும் அது மதியால் வெல்லக் கூடியதுமல்லவெனக் கூறி முடிக்கிறேன்.

# கன்னி லக்ன ஆணும், கர்க்கடக லக்னப் பெண்ணும் சேர்வது நன்மையானதா?

தனது அறிவாலும் தர்க்கவியல் வன்மையினுலும் கன்னி லக்கினகாரரர் ஆளப்படுகிருர்; இக்குணங்கள் அவருக்கு ஒரு பெரிய சக்தியாகும். தான் இதைவிட்டு விலக விரும்பினுலும் கர்க்கடக காரியுடைய மன எழுச்சி இந்தவிருப்பை விரக்திப்படுத்திவிடும். அவவுடைய வீட்டுக்குரிய சாமர்த்தியத்தை எப்படியும் இவர் மெச்சுவார். இது அவருக்கு பாதுகாப்பளிக்கும். தமது வீட்டில் தொடர்ச்சியாக நண்பர்களும் பந்துக்களும் பிரசன்னமாயிருத்தல் அவருக்கு கொஞ்சம் கோபமூட்டும். அவருக்கும் அவரது பந்தினருக்கும் உள்ள உறவு அவவுக்கு இருப்பதிலும் பார்க்க நெருங்கியதல்ல. பொருளாதார விடயத்தில் கர்க்கடகக்காரி புத்திசாலித்தனமாக விருப்பினும் அவர் மாதிரி இவ்விடயம் பற்றி விமர்சிக்கமுடியாது. தங்கள் அன்புக்குரியவர்களை பராபரிப்பதிலும் நேசிப்பதிலும் இருவரும் களிப்படைவர். இது இறுதியில் இருவருக்கும் வாழ்வு சகிக்கொணுததாகும். ஆகையால் இவ்வுறவில் அபாயமுண்டு. சதா பேச்சுவார்த்தையிலும் பார்க்க என்ன செய்வதென்பதற்கு செயலாற்றல் வேண்டும். ஆகையால் இருவருக்கும் உதாரமான நிதானமான தோழர் வேண்டும்.

இவ்வுறவில் பாலியல் பெரிய அளவில் இயங்காது. ஏனெனில் இருவரும் இந்த உந்துதலால் உணர்ச்சி வசமாகார். ஆனுல் அவர்களுடைய வாழ்வில் மிருதுவான மென்மையான பகுதியையே கொடுக்கும்.

சின்னத்தனமான சச்சரவுகள் இவ்வுறவிலிருக்கும் ஒன்றியத்தைக் கெடுத்துவிடும்.

— வே. சின்னத்துரை, நல்லூர்.


திருக்கணிதப்படி

* உங்கள் ஜாதகம் கிரக ஸ்புடங்களுடன் எழுத பலனறிய
* மனை, கிணறு வகுக்க, நினைத்த காரியம் அறிய
* திருமணப் பொருத்தம் பார்த்து நிச்சயிக்க

மற்றும் சகல சோதிட சந்தேகங்களுக்கும்

மு. சுந்தரலிங்க தேசிகர் (சோதிடர்)

ஆலடி விநாயகர் தேவஸ்தானம், திருகோணமலை.

# ஆய்வுமன்றம்

சு. பரமேஸ்வரி அம்மா, நல்லூர் - யாழ்ப்பாணம்.

உரியகாலம் கடந்து விட்டது. ஆண்டவன் அருள் கூடிஞல் மட்டும் நடக்கலாம்.

சு. சுதன் கரவெட்டிமத்தி, கரவெட்டி.

மிகுந்த முயற்சியில் தடைதாம்தங்களைத் தாண்டி, அந்நியபகுதியில் தொழில்கிடைக்கலாம் என நவநாயகர் தீர்ப்பு.

எம். அல்போன்ஸ் ஸ்ரீஜெயன்
77/23 ஜெம்பட்டா விதி.

கேதுமகாதசை முடிவில் சுக்கிரன் தசையில் நிலையான வேலைகிடைக்கச் சாதகமான காலம் அமைகிறது.

து. சகாதேவன் சுதர்சினி
5, மூனுமலைஒழுங்கை - மானிப்பாய்.

தற்சமயம் சாதகருக்குச் சனிதசை சந்திர புக்தி நிகழுகிறது. (சுத்தக்கணிப்பின்படி) இது எதிர்வரும் புரட்டாதி 20வரை நிகழும். இக்காலத்தின் மேல் சுகம்வர இடமுண்டு.

எஸ். எஸ். மார்க்கண்டு 3ம் வட்டாரம், வரணி.

உமது சாதகம் தற்காலக்கடிகார நேரக்கணிப்புக்களிலும் சரியானது. திருக் - சித்த - அதாவது வானக்காட்கியை ஆதாரமாக வைத்துக்கணிக்கப்பட்டது. அதுதான் சோதிடக்கலை அறிஞர்களின் உண்மையான முடிவு. அதன்படி பூரம் உச்சமாக விருச்சிகத்தில் 4நாழிகை முடிந்துவிடும் என்று ஒரு வாக்கியம் கூறுகிறது. அப்படியாயின் உமது செனன நேரம் 51 நாழிகை 06 விநாடி இது அதிகாலை 3மணி 10நிமிஷம் 12செக்கனுக்குச் சரியாக அமையும். இதன்படி உமது சாதகத்தை இனிக் கணித்துப் பலனைக்காணவும்.

திருமதி திருஞானசரஸ்வதி தமிழ்ச்செல்வன்
தையிட்டி, காங்கேசன்துறை.

இஷ்டதெய்வ பக்திவழிபாடுகளுடன் வைத்திய நிபுணர்களை அணுகி ஆலோசனைகேட்டு நடந்தால் புத்திரபாக்கியம் கிடைக்கும். குறிப்பிடக்கூடிய புத்திரதோஷம் எதுவும் சாதகங்களில் இல்லை.

குறிப்பு:- ஆய்வு மன்றப் பகுதிக்கு விண்ணப்பம் செய்வோர் பிறந்த திகதி நேரம் (மணி. நிமி) இரவு பகல் முதலியவற்றை விளக்கமாகக் குறிப்பிட வேண்டும். உங்கள் கஷ்டங்கள் பிரச்சினைகளைத் தெளிவாகத் தனியாக எழுதி இப்படிவத்துடன் இணைத்து 'சோதிடமலர்' ஆய்வு மன்றம், திருக்கணித நிலையம், மட்டுவில் சாவகச்சேரி. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவம் இணைக்கப்படாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்த ஒழுங்கின்படியே பதிலளிக்கப்படும். ஒரு விண்ணப்பத்தில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

## விண்ணப்பப் படிவம்

பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

பிறந்த திகதி: ஆங்கிலம் ..................................................

தமிழ் ..................................................

,, நேரம்: ..................................................

,, இடம்: ..................................................

கிரகநிலை

ஜனனகாலம்.................... தசை இருப்பு

வரு.........மா.........நாள்.........

..................................

கையொப்பம்

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.

★

வள்ளுவர் நெறியில்
வையகம் வாழ்க!

★



உங்கள் அபிமானத்திற்குரிய மில்க்வைற் நீலசோப்பில் உள்ள 500 திருக்குறள் வசனத்தை வெட்டி அனுப்பி வரதராசனர் உரையுடன் கூடிய திருக்குறள் புத்தகத்தை பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்,

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 42-00 |
| | வெளிநாட்டுக்கு | (கப்பல் வழி) | வருட சந்தா | ,, 78-00 |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 180-00 |
| | இங்கிலாந்து | (விமானவழி) | வருட சந்தா | ,, 225-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280